for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# கேரீஸ்

இளைஞர் மாத இதழ்




Vol 34-Issue 1 - January - 2026

Private circulation only



எபிரேய புத்தகத்திலிருந்து கிறிஸ்து

# இயேசு தேவதூதனைவிட பெரியவர்

REV. SELVINRAJ G CHARLES

***கேரீத் நண்பர்களுக்கு மீட்பராகப் பிறந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!***

தேவதூதர்களைப் பற்றித் தெரிந்துக்கொள்ள நீங்கள் ஆர்வமாயிருக்கிறீர்கள் அல்லவா? அவர்கள் வேதாகமத்தில் மிக மிக முக்கியமான நேரங்களில் தோன்றி இறைச் செய்திகளைக் கொண்டு வருகின்றவர்கள். அவர்கள் மனிதனிடம் தொடர்புக் கொள்வதை நாம் பார்க்கின்றோம். சில சமயம் போர்களில் ஈடுபடுகின்றார்கள். ஆண்டவரின் கட்டளையால், சில தேவதூதர்கள் சாத்தானைப் பின்பற்றி கடவுளுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டதால் அவர்கள் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதை நாம் வேதாகமத்தில் காண்கிறோம்.

எபிரெயர் நிருபம் தேவதூதர்களை விட இயேசுவின் மேன்மையை விளக்குகிறது.

- ★ தேவதூதர்கள் ஆவி மனிதர்கள் - ஆனால் இயேசு கடவுள்
- ★ தேவதூதர்கள் ஊழியர்கள் - ஆனால் இயேசு ராஜா
- ★ தேவதூதர்கள் அக்கினி ஜுவாலைகள் - ஆனால் இயேசுவே நீதிபதி
- ★ தேவ தூதர்கள் படைக்கப்பட்டவர்கள் - ஆனால் இயேசு படைப்பாளி

### ✦ இயேசுவே ஆட்சி செய்யும் ராஜா (Jesus is the Reigning King):

இயேசுவுக்கும், தேவதூதர்களுக்குமிடையே உள்ள மிகப்பெரிய வேறுபாடு என்னவென்றால், தேவதூதர்கள் வெறும் உயிரினங்கள், ஆனால் இயேசுவோ ஆளும் ராஜா. தேவதூதர்கள் யார் என்பதை சங்கீதம் 103 மற்றும் 104இல் பார்க்கின்றோம். அவர்கள் காற்று மற்றும் நெருப்பு என்று, அதாவது அவர்கள் ஆவிகள், தற்காலிகமானவைகள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அனுப்பப்பட்டவர்கள். கர்த்தர் அவர்களை ஆளும்போது அவை சக்திவாய்ந்தவை மற்றும் பயனுள்ளவை. ஆனால் அவை கடவுளின் நல்லெண்ணத்திற்குச் சேவை செய்யும் வெறும் படைப்புகள்.

### ✦ இயேசுவே நித்திய படைப்பாளர் (Jesus is the Eternal Creator):

இயேசு தான் நித்திய படைப்பாளர். அதனால் தான் அவருக்கு நியாயந்தீர்க்கும் உரிமை உண்டு. அவர் முதலில் அனைத்தையும் படைத்தார். இயேசு நித்தியமானவர் மட்டுமல்ல, தொடக்கமும், முடிவும் இல்லாதவர். இயேசுவைப் பாருங்கள் அவர் எல்லாவற்றையும் தமது கரங்களில் வைத்திருக்கிறார். உங்கள் பாவம் மன்னிக்கப்பட வேண்டுமென்றால், இயேசுவைப் பாருங்கள். அவர் அவை அனைத்திற்கும் விலை கொடுத்துவிட்டார். அவர் எல்லாவற்றையும் பார்க்கின்றார். உங்களை அறிந்து, உங்கள் பேரில் அக்கறை கொள்கிறார்.

### ✦ கடவுளின் மாட்சிமையின் சுடரொளி (The Flame of God's Glory):

கடவுளின் மகிமையையும், பிரகாசத்தையும் பிரதிபலிக்கிறார்.

### ✦ கடவுளின் இயல்பின் அச்சுப்பதி (The Print of God's Nature):

இயேசு கடவுளின் உண்மையான இயல்பு மற்றும் தன்மையின் நேரடி வடிவம்.

### ✦ வல்லமையுள்ளவர் (Powerful):

இயேசு தன் வல்லமை மிக்க வார்த்தையினால் எல்லாவற்றையும் தாங்குகின்றவர்.

### ✦ தேவதூதர்களை விட உயர்ந்தவர் (Higher than the Angels of God):

ஏனெனில் கடவுள் தேவதூதர்களிடம் சொல்லாத பல காரியங்களை அவரிடம் சொல்லியிருக்கிறார். கடவுளின் மகன் (இயேசு) வானதூதரை விட மேலானவர். ஏனெனில் கடவுள் வானதூதுவர் எவரிடமாவது, நீ என் குமாரன் இன்று நான் உன்னைப் பெற்றெடுத்தேன் என்றோ, நான் உன் தந்தை, நீ என் மகன் என்றோ ஆண்டவர் தேவதூதனைப் பார்த்து சொன்னதுண்டா? ஆனால் கடவுள் கிறிஸ்துவை, நான் உன்னை ஜெநிப்பித்தேன். நீ என் குமாரன் என்று சொல்கிறார்.

கடந்த காலத்தில் கடவுள் நம் முற்பிதாக்களுக்கு பல வழிகளில் பேசினார். ஆனால் இந்த கடைசி நாட்களில் அவர் தம்முடைய குமாரன் மூலம் நம்மிடம் பேசுகிறார். முந்தின எல்லா வழிகளையும் விட இயேசு உயர்ந்தவர்.

- ★ எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம் உடையவரைத் துதியுங்கள்.
- ★ அவர் கடவுளின் மாட்சிமை சுடரொளி அவரைத் துதியுங்கள்.
- ★ அகிலத்தையும் படைத்தவரைத் துதியுங்கள்.
- ★ தேவதூதர்களை விட உயர்ந்தவரைத் துதியுங்கள்.
- ★ அவர் நீதியின் செங்கோல், அவரைத் துதியுங்கள்.

கடவுள் யார் என்பதை நீங்கள் அறிய விரும்பினால், இயேசுவைப் பாருங்கள். கட்டுப்பாட்டை மீறி சுழன்று கொண்டிருக்கும் உலகத்தைப் பற்றி நீங்கள் பயப்படுகின்றீர்கள், இயேசுவைப் பாருங்கள். அவர் எல்லாவற்றையும் தன்னுடையக் கரங்களுக்குள் வைத்திருக்கிறார். ஆமென்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - திசைகாட்டி - 5
விவாதக்களம் - ஆலயத்திற்குள் பாதரட்சைப் போட்டு போகலாமா? - 7 & 8
அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்! - 9
மனச்சோர்வு நோய் (Depression Disorder) - 12
FOFO / FOMO - 14
உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? - 15
HANDLE WITH CARE - 20
வார்த்தைக் களம் 'கனம்' - 22

# களங்களில் புதிய பரிணாமம் காண்போம்

**புதிய பார்வையோடு, புதுமைகளைச் செய்யத் துடிக்கும் வாலிபர்களுக்கு, இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் 2026ஆம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

களம் (Field) என்பது - இடம், போர்க்களம், ஆடுகளம், நெற்களம், தேர்தல் களம் போன்ற அர்த்தங்களைக் கொண்டது. இது ஒரு செயல் நடக்கும் இடத்தைக் குறிக்கும். பரிணாமம் (Evolution) என்பதற்கு வளர்ச்சி, முன்னேற்றம், விரிவாக்கம் என்கிறதான வேறு வார்த்தைகள் உண்டு. வளர்ச்சி அல்லது முன்னேற்றம் என்பது பொதுவான பொருள். ஒரு நிலை அல்லது வடிவத்திலிருந்து, மற்றொரு நிலைக்கு மாறுவதைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக வண்ணத்துப்பூச்சியின் உருமாற்றத்தை எடுத்துக் கொள்ளலாம். இது முட்டை - கம்பளிப்புழு (லார்வா) - கூட்டுப்புழு - வண்ணத்துப்பூச்சி என நான்கு நிலைகளை வாழ்க்கை சுழற்சியாக கொண்டுள்ளது.

முட்டை நிலையிலிருந்து வண்ணத்துப்பூச்சி நிலைக்கு வருவது போன்று, நாம் எந்த நிலையிலிருந்தாலும் கிறிஸ்து என்ற நிலைக்குள் வரவேண்டும் என்பதே கர்த்தர் உங்களிடத்திலும், என்னிடத்திலும் எதிர்பார்க்கும் மாற்றம். இதற்கு ரோமர் 12:2 என்ற வசனத்தை ஆதாரமாக எடுத்துக்கொண்டு, வேத வசனங்களை வாசிப்பதின் மூலமும், அதை தியானிப்பதின் மூலமும் உங்கள் மனம் கர்த்தருக்கு உகந்த வகையில் சிந்திக்கும்படி செய்ய வேண்டும். உங்களுடைய திட்டங்கள், இலக்குகள், ஆசைகள் அனைத்தும் பரலோகத்துக்கடுத்த நித்தியமான சத்தியத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும். நீங்கள் போர்க்களம், ஆடுகளம், நெற்களம், தேர்தல் களம் என்ற எந்த களத்திலிருந்தாலும் வண்ணத்துப்பூச்சியைப் போல புதிய நிலைக்கு மாறி, கிறிஸ்துவுக்காக வாழக்கூடிய புதிய பரிணாமம் காண வேண்டும்.

கடந்த ஆண்டு முழுவதும் ஊழியத்தின் வகைகளையும், அதைக் குறித்ததான தெளிவையும் பெற்ற நாம், தேவ ஒத்தாசையோடு அந்த ஊழியத்தை இன்னும் தீவிரப்படுத்த ஜெபத்தோடு களங்களில் வீரியம் என்ற தலைப்பின் கீழ் இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு நிலைகளில் 12 மாத புத்தகங்களையும் கொண்டுவருகிறோம்.

ஆதலால் இவ்வருடத்தின் முதல் இதழை, களங்களில் புதிய பரிணாமம் காண்போம் என்ற தலைப்புடன் ஆரம்பிக்கிறோம். இவ்வாண்டு பத்திரிகையின் அனைத்து பக்கங்களும் களம் என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிறது. இப்பத்திரிக்கையானது வாலிபர்கள் ஜெபக்குழுக்களில் பயன்படுத்தும் வகையில் நான்கு வாரத்திற்கான செய்திகளும், எட்டு பக்கங்களில் ஜெபக்குறிப்புகளும், ஏழு விதமான தலைப்புகளில் சிறப்புச் செய்திகளும் எழுதப்படுகின்றன. இதை ஜெபத்துடனும், கவனத்துடனும் வாசித்து, இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்து, அவருடைய ராஜ்யத்தை கட்டும் மிஷனெரிப்பணியில் முழு மனதோடு ஈடுபடுங்கள். இதை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

இம்மாதம் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்களில் (பொங்கல் விடுமுறையில்) நடைபெறுகிற வாலிபர் முகாமிற்காக ஜெபியுங்கள். வாலிபர்கள் இம்முகாமில் திரளாய் வந்து கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம். 2025ஆம் ஆண்டு முழுவதும் வாலிபர் ஊழியத்திற்காக ஜெபித்து, ஆதரவு கொடுத்த அனைத்து முழு நேர ஊழியர்களுக்கும், கௌரவ முன்னேற்றப்பணி செயலர்களுக்கும், வாலிபத் தலைவர்களுக்கும், வாலிபர்கள் அனைவருக்கும், கேரீத் பத்திரிக்கை எழுத்தாளர்கள் அனைவரின் சார்பாக உங்களுக்கு நன்றிகளைக் கூறுகிறோம். இந்த புதிய ஆண்டிலும் கேரீத் பத்திரிக்கை வெளிவருவதற்கு உதவியாயிருக்கும் எழுத்தாளர்கள், அலுவலகப் பணியில் உதவி செய்கிற திருமதி. எப்சி மற்றும் எங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவக் கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*



## தகப்பனின் ஆசீர்வாதமும் தலைவனின் தரிசனமும்

# தலைமகன் ரூபன்

REV. DANIEL GNANAPRAGASAM

1st WEEK MESSAGE - TORAH - கோத்திர களம்

யாக்கோபின் மூத்த மகனாகிய ரூபன், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் தலைவகிக்கத் தகுதியான ஒருவராக விளங்கினார். மூத்த மகனுக்கு உரிய கௌரவமும், பொறுப்பும் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் ரூபனின் வாழ்க்கையில் நடந்த ஒரு தவறு, அவனுடைய ஆசீர்வாதத்தையும், கௌரவத்தையும் குலைத்தது. இந்த கட்டுரையில் ரூபனின் வாழ்க்கை, அவரது கோத்திர நிலை மற்றும் அவர் வாயிலாக தேவன் நமக்கு சொல்லும் பாடங்களை ஆராய்வோம்.

கானான் தேசம் பங்கிட்டபோது, ரூபனின் கோத்திரத்தினர் யோர்தானின் கிழக்குப் பகுதியில், சவக்கடலின் கிழக்கே, அர்னோன் ஆற்றிலிருந்து வடபகுதி வரையிலான பரந்த நிலப்பகுதியில் குடியேறினர். அவர்கள் ஆரம்பத்தில் யோர்தான் ஆற்றின் மேற்குப் பகுதியில் யுத்தத்தில் பங்கெடுத்து, பின்னர் கிழக்கே வந்து உடன்பாட்டின் அடிப்படையில் தங்கினர். பல ஆராய்ச்சியாளர்கள் இவர்களை மற்ற கோத்திரங்களிலிருந்து சற்றே தனித்த மற்றும் புறம் சாய்ந்த சமூகமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

### தகப்பனின் ஆசீர்வாதமும், தீர்ப்பும்:

யாக்கோபு தனது மூத்த மகனாகிய ரூபனிடம் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தார். குடும்பத்தில் முதன்மை வழிநடத்துநராகவும், இரட்டை ஆசீர்வாதம் பெறக்கூடியவராகவும் ரூபன் விளங்கினார்.

ஆனால் அவர் செய்த பாவம் தந்தையின் இரண்டாவது மனைவியுடன் உறவு கொள்ளுதல் (ஆதி. 35:22) அவரின் வாழ்வை முற்றிலுமாக மாற்றியது. இந்த தோல்வியின் விளைவாக யாக்கோபு கூறினார்:

**“நீரைப் போல் நிலை அற்றவன்,**
**உன்னால் உயர்வு உண்டாகாது.”**

இந்த வார்த்தை ரூபனின் மனநிலை மற்றும் ஒழுக்கமின்மையைக் காட்டுகிறது. திறமையும், ஆற்றலும் இருந்தும், உறுதியின்மை காரணமாக அவன் அழகான ஆசீர்வாதங்களை இழந்தான்.

> **நடுநிலைத்தன்மை எல்லா சூழ்நிலைகளிலும் நியாயத்தை நிலைநிறுத்த முடியாது. தேவனுடைய நியாயத்தில் உறுதியுடன் நிற்கும் மனப்பாங்கே ஆசீர்வாதத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் வழிமுறை**

### ரூபனின் மனநிலை மற்றும் நடுநிலைத்தன்மை:

ரூபன் முழுமையாக தீயவன் அல்ல. யோசேப்பை அவரது சகோதரர்கள் கொல்ல முயன்றபோது, ரூபன் அவனைக் காப்பாற்ற ஒரு நடுநிலையான ஆலோசனையை வழங்கினார். “அவனைக் கொல்லாதே; அவனை குழியில் விடுவோம்.” இதன் மூலம் ரூபனுக்கு ஓரளவு நன்மையான மனநிலை இருந்தது தெரியவருகிறது. ஆனால் உறுதியான தீர்மானம் எடுக்க முடியாத தன்மை, அவனை “நீரைப் போல் நிலையற்றவன்” என்று அழைக்கச் செய்தது. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது, நடுநிலைத்தன்மை எல்லா சூழ்நிலைகளிலும் நியாயத்தை நிலைநிறுத்த முடியாது என்பதே. தேவனுடைய நியாயத்தில் உறுதியுடன் நிற்கும் மனப்பாங்கே ஆசீர்வாதத்தை தக்கவைத்துக்கொள்ளும் வழிமுறை.

### தலைவனின் தரிசனம்:

பல சீரழிவுகள் ரூபனின் கோத்திரத்தில் ஏற்பட்டபோதிலும், மோசே அவர்களை மறக்கவில்லை. உபாகமம் 33:6இல் அவர் கூறுகிறார்.

**“ரூபன் சாவாமல் பிழைப்பானாக; அவன் ஜனம்**
**கொஞ்சமாயிராது என்றான்.”**

இந்த பிரார்த்தனையில் மோசே, ரூபனின் கோத்திரம் முற்றிலும் அழிந்துவிடாது, தேவனுடைய கிருபையால் நிலைத்திருக்கட்டும் என்று வேண்டுகிறார். இது தலைவன் ஒருவன் தனது தேசத்தின்மீது கொண்ட கரிசனமும் பரிதாபமும் காட்டுகிறது. ஆனால் பின்னர் காலப்போக்கில், ரூபனின் கோத்திரம் பிற இனங்களுடன் கலந்து, வெளிநாட்டு கலாச்சாரங்களால் ஈர்க்கப்பட்டு, சிதறடிக்கப்பட்டது. இதுவே ஒரு ஆவிக்குரிய எச்சரிக்கை. உலக சிந்தனைக்குள் இணைந்தால் விசுவாச அடையாளம் மங்கிவிடும்.


ரூபனின் வாழ்க்கை நமக்கு ஒரு வெளிப்படையான பாடம் அளிக்கிறது. தேவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை நிலைநிறுத்துவது நம் கைகளில் தான் உள்ளது. நம் நிலையற்ற மனநிலை, ஒழுக்கமின்மை, அல்லது உலக ஆசைகள் நம்மிடமிருந்து தேவனின் அருளை விலக்கி விடக்கூடாது. அதே சமயம் தலைவனாகப் பணிபுரிபவன் கரிசனையுடனும், ஒழுக்கத்துடனும் நியாயமாக வழிநடத்த வேண்டும்.

### முடிவு

ரூபனின் வரலாறு ஆசீர்வாதம் இழந்தாலும், கிருபை இன்னும் அழியவில்லை என்று நமக்குச் சொல்கிறது. யாக்கோபின் தீர்ப்பும், மோசேயின் பிரார்த்தனையும் இணைந்து, தேவன் தனது மக்களுக்கு நியாயத்திலும், இரக்கத்திலும் எவ்வாறு நடக்கிறார் என்பதை வெளிப்படுத்துகின்றன. இன்றைய தினம் நாமும் சிந்திக்க வேண்டியது இதுவே. நாம் ரூபனைப்போல் நிலையற்ற விசுவாசியாக இருக்கிறோமா? அல்லது தேவன் அளித்த ஆசீர்வாதத்தை உறுதியுடன் தக்கவைத்துக்கொள்கிறோமா? கர்த்தர் நம்மை உறுதியான விசுவாசத்துடனும், நிலைத்த நம்பிக்கையுடனும் ஆசீர்வாதத்தை ஏற்று வாழ அழைக்கிறார். ஆகவே ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணிப்போம். அவரே நம்மை வழி நடத்துவாராக.

## இளம் வாலிபர்களின் அறிவியல் களம்

# COMPASS



My dear teen boys & girls. Happy New Year 2026 wishes to you and your family. இந்த ஆண்டும் இன்னும் ஒரு சிறந்த ஆண்டாக அமைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்கு பெலன் தருவாராக. Kerithஇன் இந்தப் பகுதி மூலமாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. இந்த பகுதியின் Yearly Plan என்னன்னா, நீங்கள் Studiesகாக அடிக்கடி பயன்படுத்தும் Thingsஐ வைத்து Bibleளோடு Compare பண்ணி படிக்கலாம் என முடிவெடுத்திருக்கிறோம். Geometry Boxஇல் உள்ள எல்லா Thingsயையும் பற்றி தான் நாம் இந்த ஆண்டு முழுவதும் பார்க்கப் போகிறோம். இந்த Listல First Compass; இதைப் பற்றி இந்த January Monthல பார்ப்போம். Compass Circle வரைய use பண்றோமோ இல்லையோ, நம்ம பக்கத்துல இருக்குற Friendsயை குத்துறதுக்கும், வேற குரங்கு சேட்டைகள் செய்வதற்கும் தான் நம்ம mostஆ use பண்ணியிருப்போம். இப்ப இதோட உண்மையான usage என்னன்னு கொஞ்சம் detailஆ பார்ப்போமா?

Compass ஒரு connecting instrument. இது Mathematicsயையும், Artயையும், Engineeringயையும் ஒன்னா சேர்க்குது. Circle, Symmetry, Proportion & Sidesன்னு எல்லா Geometryயையும் Easyயா வரைய முடியும். இப்போ Recent Technologyல Computer Aided Drafting (CAD) அதிகமாக Use பண்றதால Compassக்கு Modern Scienceல பெரிய வேலையில்லை. ஆனா பழைய காலத்தில Compassஅ பயன்படுத்தி தான் நாம இன்னைக்கு பாக்குற Pyramid மாதிரியான பெரிய Structures எல்லாம் Correctஆன Shapeஇல Design பண்ணுவாங்க. சரி இப்ப Compassயையும், Bibleயையும் Compare பண்ணி படிப்போமா?

Compassக்கு 2 leg ஒன்னு Pin-leg, இன்னொன்னு Pencil-leg. இந்த Pin-legயை Correctஆ Place பண்ணுனா மட்டும் தான் ஒரு சரியான Circle வரைய முடியும். ஒருவேளை இந்த Pin-Leg move ஆச்சுனா Circle அதோட Shapeல இருக்காது. இந்த Pin-leg நம்முடைய Lifeல இயேசு கிறிஸ்துவை Centreல வைக்கனும்னு சொல்லுது. அப்போதுதான் Life Stableஆ இருக்கும். இத பத்தி தாவீது சொல்றத கேளுங்க!

**"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை". (சங்கீதம் 16:8)**

அடுத்தது Pencil-leg, Pin-legஅ Centreஆ வச்சு இந்த Pencil-leg move பண்ணும். அப்படி move ஆகும் போது நமக்கு தேவையான ஒரு Perfect Circle கிடைக்கும். இந்த Pencil-leg நம்முடைய Actionயை குறிக்குது. அதாவது Choices, Words & Habitsன்னு எல்லாம் இயேசு கிறிஸ்துவோடு Connectedஆ இருக்கனும். Bible Readingயும், Prayerயும் உன்னோட hapitஆ மாறனும். அது தீர்மானம் இல்லை, Life styleஆ ஆகனும். இத பத்தி இயேசுவோட Brotherஆன James என்ன சொல்றாருனு கேளுங்களேன்!

**"நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1:22). (இந்த Verseஇல "வஞ்சியாதபடிக்கு" அப்படின்னா Cheat ஆகாதபடிக்குன்னு அர்த்தம்)**

கடைசியா Compassயை வச்சு நீ வரைய போற Circleளோட Radiusயை நீ தான் Decide பண்ணுவ. இன்னைக்கு நிறைய பேர் Christian Life Style, ஒரு Jail வாழ்க்கைன்னு நினைக்குறாங்க. ஆனா, அது அப்படி இல்ல, 'Christian Life is freedom with Discipline'. Discipline இல்லாத Freedom Chaosல தான் முடியும். God's word எல்லாமே Protection, not Restriction. இத பத்தி நம்ம பவுல் என்ன சொல்றாருனு கேளுங்க!

**"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது". (1 கொரி. 10:23)**

Ok teens! Compassஅ பத்தின இந்த விஷயங்கள் உங்களுக்கு usefulஆ இருந்திருக்கும்னு நம்புறேன். இதேபோல Geometry Boxஇல இருக்கிற வேற ஒன்ன பத்தி next month பார்க்கலாம். Until teen see you all soon!!



MRS. JOYLINE JEROME

# ஓசியா

## கடவுளின் மாறாத அன்பு



“கடவுளின் அன்பே மிகச்சிறந்தது” என்று போதித்த குருவிடம் அந்த சீடன் தன் தாயின் அன்புதான் உயர்ந்தது என சாதித்தான். இதை சோதித்துக் காட்ட முடிவு செய்த குரு, அவனது வீட்டிற்குச் சென்றார். ஏற்கனவே தான் கொடுத்த மருந்தை உட்கொண்டு, அசையாத கட்டைப்போல கிடந்த அவனைச் சுற்றி அவனது குடும்பத்தினர் அழுது கொண்டிருந்தனர். அப்பொழுது குரு, அவனை எழுப்பக்கூடிய மாற்று மருந்தை அவனது தாயிடம் கொடுத்து, நீங்கள் இதைக் குடித்தால் உங்கள் மகன் பிழைப்பான். ஆனால் நீங்கள் உங்கள் உயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என்றார். சற்றும் தயக்கமில்லாமல் அந்தத் தாயார் சொன்னார், எனக்கு இவன் மட்டுமா பிள்ளை, மற்ற பிள்ளைகளை நான் காப்பாற்ற வேண்டாமா? எனக் கூறி மருந்தைக் குடிக்க மறுத்துவிட்டார். இதனை கேட்டுக்கொண்டிருந்த சீடன் சட்டென எழுந்து குருவிடம் சொன்னான், நீங்கள் சொன்னதுதான் சரி, கடவுளின் அன்பு ஒன்றே மிகச்சிறந்தது என ஒப்புக்கொண்டான்.

கி.மு. 18ஆம் நூற்றாண்டின் தீர்க்கதரிசியான ஓசியா தேவனின் மாறாத அன்பையும், அதற்கு எவ்விதத்திலும் தகுதியற்ற இஸ்ரவேலரின் வாழ்க்கை முறையையும் தனது சமகால இஸ்ரவேலருக்கு உணர்த்துவதற்காக சோரம்போன கோமேர் என்ற பெண்ணை ஆண்டவரின் கட்டளைக்கு இணங்க திருமணம் செய்கிறார். திருமணம் என்பது எல்லா சமுதாயத்திலும் உயர்ந்ததாக அங்கீகரிக்கப்படுகிறது. அது உன்னத உறவின் அடையாளம்.

### 1. கடவுளின் மாசற்ற அன்பு:

இஸ்ரவேலர் சோரம்போனார்கள் என்பதை வெளிப்படுத்த விரும்பிய கடவுள், அதனை சிறிய தீர்க்கதரிசிகளின் முதல் தீர்க்கதரிசியான ஓசியா என்னும் தீர்க்கதரிசியின் மூலம் தன் மக்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறார். பொதுவாக தீர்க்கதரிசிகள் கடவுளின் செய்தியைக் கூறி தம் ஜனத்தை அவரிடம் திருப்புபவர்கள். ஆனால் கடவுள் இவரைத் தனது வாழ்க்கையின் மூலம் அறிவிக்க அறிவுறுத்துகிறார். எனவே, சோரம்போனப் பெண்ணைத் திருமணம் செய்கிறார் ஓசியா தீர்க்கன். இதனை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். குறிப்பாக ஒரு வாலிபனால் இதனைக் கற்பனைச் செய்துகூட பார்க்கமுடியாது. எல்லா வாலிபர்களும் தன் வருங்கால மனைவி கற்புடையவளாக இருக்கவேண்டும் என்பதையே விரும்புவார்கள். ஆனால், ஓசியா தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார். கர்த்தருடைய மனதின் எண்ணத்தை, மனக்குமுறலை வெளிப்படுத்தவே இப்படிச் செய்கிறார். உன்னை வெகுவாய் நேசித்தேன். ஆனால் நீயோ என்னை மறந்துவிட்டாய், என்னை வெறுத்துவிட்டாய், என் உறவை முறித்துவிட்டாய். ஆனாலும் இன்னமும் உன்னை நான் நேசிக்கிறேன் என்பது தான் கர்த்தர் இஸ்ரவேலருக்கு உணர்த்த விரும்பிய செய்தி. ஆண்டவர் அளவில்லாமல் நேசிக்கிறார் என்பது மட்டுமல்ல, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், பரிசுத்த அன்பினால் உன்னை நேசிக்கிறார். நீ அவரை நேசிக்கிறாயா? நீ எந்த நிலையிலிருந்தாலும் உள்ளபடி வா! உன் உள்ளம் உருகி வா! அன்பாய் அழைக்கிறார் வா!

### 2. இஸ்ரவேலரின் மாய்மால அன்பு:

கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள், அவருக்கென்று இவ்வுலகில் வாழும்படி அழைப்புப் பெற்றவர்கள். இதன்மூலம் ஆண்டவரை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியவர்கள். ஆனால், தங்களின் தெரிந்தெடுப்பையும், அதின் நோக்கத்தையும் உதாசீனம் செய்யும் வகையில் அதனை மறந்து, தங்களின் உன்னத அழைப்பை புறம்பாக்கிவிட்டனர். மேலோட்டமாக ஆண்டவரையும், உள்ளான வாழ்க்கையில் மற்ற ஜனங்களைப் போல் அந்நிய தேவர்களையும் சேவித்தார்கள். கணவனுக்கு துரோகம் செய்யும் மனைவியைப் போல வாழ்ந்து வந்தனர். அன்பற்ற உறவின் அடையாளமாய் இரட்டை வாழ்க்கை அதாவது மாய்மாலமான வாழ்க்கை வாழ்ந்தனர். இஸ்ரவேலரின் வாழ்க்கை எதைப்போன்று இருந்தது என்பதை வேதனையோடு ஓசியா தீர்க்கதரிசி மூலம் சில பதங்களோடு ஒப்பிட்டு வெளிப்படுத்துகிறார். சோரம் போனவன் (1:2), அடங்காத கிடாரி (4:16), திருப்பிப் போடாத அப்பம் (7:8), பேதையான புறா (7:11), காட்டுக் கழுதை (8:9), பலனற்ற திராட்சைச் செடி (10:1). உன்னோடு உள்ள உறவை ஆண்டவர் எவ்வாறு ஒப்பிட முடியும் என்று உன்னால் சொல்ல முடியுமா? ஆண்டவர் மேலுள்ள உன்னுடைய அன்பு எத்தகையது? மாயமற்றதா? அல்லது மாய்மாலமானதா? அன்பே உருவான ஆண்டவர் உன்னைச் சிந்திக்க அழைக்கிறார். சிந்தித்து, சீர்ப்படுத்து.

### 3. கடவுளின் மாறாத அன்பு:

இஸ்ரவேலரின் மாய்மாலமான அன்பைக் கடிந்து உணர்த்துவதை ஓசியா புத்தகத்தின் முதற்பகுதியிலும், அவர்கள் மேலுள்ள தனது அன்பை எண்ணி ஏங்குவதை மையப்பகுதியிலும், இறுதியில் “நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று” (14:4) என அவர்கள் மேலுள்ள தனது மாறாத அன்பினை வெளிப்படுத்துவதை நாம் காண முடியும். கர்த்தரின் அன்பு ஒருபோதும் மாறாதது. சூழ்நிலைகளைச் சார்ந்தோ, மனிதர்களைப் பொறுத்தோ அது மாறிக்கொண்டே இருப்பதில்லை என்கிற சத்தியத்தை ஆமோஸ் நமக்கு விளக்குகிறார். மாற்றம் ஒன்றே மாறாதது என்கிற கூற்று கர்த்தருக்குப் பொருந்தாது. ஏனெனில், அவர் கர்த்தர், அவர் மாறாதவர், அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் (எபி. 13:8). அவர் மேலுள்ள எனது அன்பு மாறினாலும், மாறாத அன்பினால் என்னை நேசிக்கிறார் என்பது இந்தப் புத்தாண்டில் நமக்கு ஒரு புத்துணர்ச்சியையும், புது நம்பிக்கையையும் அளிக்கிறது. இந்த மாறாத அன்பை உணர்ந்து, அவரை மறுத்துவிடாமல் இந்த புதிய ஆண்டில் மட்டுமல்ல, எஞ்சிய நாட்களெல்லாம் அவரை நேசிக்க உன்னை அர்ப்பணிப்பாயா!

REV. JOHNSON DANIEL

# விவாதக்களம்

## நடுவர் : முனைவர் கோயில் குட்டி

*இன்றைய விவாதத் தலைப்பு:*

## ஆலயத்திற்குள் பாதரட்சைப் போட்டு போகலாமா?

*பங்கு பெறும் அணியினர்*

| | | |
|---|---|---|
| ஆ.வா.சங்கம் | : | ஆலய வாலிபர் சங்கம் |
| ஆ.ஐ. சங்கம் | : | ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| பெ.ஐ. சங்கம் | : | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| ஞா.ப.ஆ சங்கம் | : | ஞாயிறு பாடசாலை ஆசிரியர் சங்கம் |
| இ.த. ஐக்கியம் | : | இளம் தம்பதியினர் ஐக்கியம் |

ஆ. வா. சங்கம்: இதில் என்ன தவறு இருக்கிறது? எல்லாம் மனசு தான் காரணம். செருப்பை வெளியே கழட்டி விட்டுவிட்டு உள்ளே போய் செருப்பு தொலைந்துவிடுமோ என்ற எண்ணத்தில் இருந்தால் என்ன பிரயோஜனம்.

கோ. குட்டி: சரியாக நம் இளைஞர் ஐக்கிய சங்கம் விவாதத்தை ஆரம்பித்திருக்கிறது. உங்கள் ஒவ்வொருவருடைய கருத்தைச் சொல்லுங்கள். நாம் ஒருமித்த கருத்துக்கு வருவோம்.

பெ. ஐ. சங்கம்: ஐயா, தோத்திரம், தோத்திரம் ...... தோத்திரம் தம்பி

கோ. குட்டி: அம்மா தோத்திரம் போதும், முதல்ல காரியத்தைப் பற்றி பேசுவோம்.

பெ. ஐ. சங்கம்: அப்பறம் ஐயா செருப்பு சரி.... கோயிலுக்கு பெண்கள் முக்காடு போடாம வராங்களே அதுக்கு நீங்க என்ன சொல்றீங்க?

கோ. குட்டி: அம்மா முக்காடைப் பிறகு பார்ப்போம். இப்போ செருப்புப் பத்தி மட்டும் பேசுவோம்.

பெ. ஐ. சங்கம்: சரி ஐயா, நான் சொல்றது என்னன்னா, செருப்புப் போட்டு உள்ளே போனா ஆலயம் அழுக்காயிராதா, நீங்களே சொல்லுங்க.

கோ. குட்டி: அழுக்கு சரிதாம்மா அத நான் தொடச்சிருவேன். அதுக்குதான் நான் இருக்கேனே. ஆனா செருப்பு போடலாமா, போடக்கூடாதான்றத மட்டும் பத்தி சொல்லுங்க

ஆ. ஐ. சங்கம்: உன் பாதரட்சையைக் கழட்டிப் போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியின்னு கோவில் சுவத்துல எழுதிப்போட்டிருக்காங்க. அதை வாசித்த பின்பும் ஏன் கோவிலுக்குள்ள செருப்பு போட்டுட்டுப் போறாங்க?

ஞா. ப. ஆ. சங்கம்: அது கோயில்ல எழுதிப்போட்ட அறிவிப்பு கிடையாது. அது பைபிள் வசனம்.

ஆ. ஐ. சங்கம்: ஓ ! அப்படியா ! ஏதோ எழுதிப் போட்டிருக்காங்க. கீழ்ப்படிய வேண்டியதுதானே, தேவைனா நாம செருப்பு ஸ்டாண்ட் ஒன்னு செஞ்சி கொடுத்து, வேலைக்கு ஆளையும் போட்டு, சம்பளம் குடுத்துருவோம்.

கோ. குட்டி: ஐயா ! இப்ப நம்ம விவாதம் ஆலயத்துக்குள் செருப்புப் போடலாமா கூடாதா?

இ. த. ஐக்கியம்: என் கருத்து என்னன்னா... போடலாம். நாங்க கல்யாணம் முடிச்சு. பின்லாந்துக்கு ஹனிமூன் போனோம். அங்க ஒரு சர்ச்சுல நடந்த சண்டே சர்வீஸ்ல செருப்பு கழட்டி விட்டு உள்ளே போனோம். 5 நிமிஷம் எங்களால உக்கார முடியல. "குளிர்" தாங்க முடியல, ஆலயத்தில் உள்ளவங்க ஷூ போட்டுக்கோங்கனு சொன்னாங்க. ஏன் பின்லாந்துக்கும் இதே பைபிள் தானே. அங்க செருப்பு போட்டுட்டு போறாங்க.

கோ. குட்டி: சரியான காரணம்யா?

பெ. ஐ. சங்கம்: கோயிலுக்குள்ள ஆண்டவரோடு உடன்படிக்கை பண்ணப் போறோம். ரூத் புத்தகத்துல செருப்ப கழட்டி ஒப்பந்தம் போட்டாங்களே.

கோ. குட்டி: அம்மா அத ஏன் இங்க இழுக்கிறீங்க.

பெ. ஐ. சங்கம்: இல்ல ஐயா ...செருப்ப கழட்டிவிட்டு, கடவுளோட நாம உடன்படிக்கை பண்ணனும்.

ஆ. வா. சங்கம்: இது புதுசா இருக்குமா ! புதுசா இருக்கு !

பெ. ஐ. சங்கம்: ஐயா இஸ்ரவேல்ல பாதரட்சையைக் கழட்டிபோட்டவன் வீடு இருக்கு. இதுக்கு என்ன அர்த்தம்.

கோ. குட்டி: அம்மா நீங்க பைபிளை பரிட்சைக்கு படிச்ச மாதிரி முழுவதும் தரோவா படிச்சிட்டீங்க. இனிமேல் யாராவது உங்களுக்கு முதல்ல இருந்து வரிசையா சொல்லிக் கொடுத்தாதான் உண்டு.

இ. த. ஐக்கியம்: கோவில் செவுத்துல எழுதிப் போட்டுருக்காங்கன்னு சொன்னாங்களே. அது பைபிளில மோசே கிட்ட கடவுள் சொன்னது. ஆனா அதன் ஞான அர்த்தம் என்னன்னு பார்க்கணும். தேவன் பிரசன்னமாயிருக்கிற இடம் முட்செடி எரிந்து கொண்டிருந்த அந்தப் பகுதி. இந்த நிலப்பகுதி சாபம் இல்லாதது. இங்கு பாதரட்சை தேவை இல்லை. நாம் புரிந்து கொள்ள வேண்டியது:- பூமி சபிக்கப்பட்டது, முட்கள் நிறைந்தது - முட்கள் சாபத்திற்கு அடையாளம், இந்த சாபத்திலிருந்து நம்மைக் காக்க தேவனால் கொடுக்கப்பட்டதுதான் பாதரட்சை போன்ற நியாயப்பிரமாணம். தேவன் மோசேயிடம் உணர்த்தியது உன் மூலம் நான்

MR. ISAAC KAMALESH



# விவாதக்களம்

நியாயப்பிரமாணத்தைத் தருகிறேன். ஆனால் என்னுடைய நேரடி ஆளுகையின் கீழ் இது தேவைப்படாது என்பதை உணர்த்தச் சொன்னது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். நான் இன்னொன்னு சொல்லனும். அந்த சாபமாகிய முள்ளை, இயேசு சிலுவையில் தன் தலைல ஏற்றுக்கொண்டாரு. அதனால இனிமே வந்து செருப்பு போடணுமா? வேண்டாமா? முக்கியமல்ல. இயேசுவை எற்றுக்கொண்டு டீசெண்டா அவரை ஆராதிச்சிட்டு போகணும்.

கோ. குட்டி: சபாஷ் supera சொன்னீங்க "டீசன்ட்டா" அப்படின்னு.... நானும் இங்க ஒன்ன பதிவு பண்ணனும். எங்க அப்பா? ஆலய தெருவுக்குள்ள வரும் போது, அந்த தெரு முனையிலேயே செருப்ப கழட்டிட்டு வந்தாங்க. நான் ஆலய காம்பவுண்டுக்கு வெளியே செருப்பைக் கழட்டிட்டு வந்தேன். என் பிள்ளைங்க கோயில் வாசல்ல செருப்பைக் கழட்டிட்டு போனாங்க. இப்போ என் பேத்தி ஏன் தாத்தா செருப்பைக் கழட்டனும்? அப்படின்னு கேக்குறா? அவுங்க போற சர்ச் சென்னையில் rented A/C Hall, வெளிய யாரும் செருப்பைக் கழட்டமாட்டாங்க. பாஸ்டர் ஷூ போட்டுட்டு தான் ஸ்டேஜிலேருந்து ஓர்ஷிப் நடத்துவாராம். இதுக்கு என்ன பதில் சொல்லுறீங்க .

(களம் சூடு பிடிக்கிறது. சிறிய இடைவெளிக்குக் பின் விவாதம் தொடரும்)

ஞா. ப. ஆ. சங்கம்: Alter / ஆலயம் அப்படின்னா செருப்பை வெளியே கழட்டிடுங்க. Stage / Rent Hall, A/C Hall, Meha Churchன்னா செருப்பைப் போட்டுட்டு போகட்டும். இதுல குழப்பம் ஏன்?

ஆ. வா. சங்கம்: நீங்க சொல்றத பார்த்தா ஆலயம் பரிசுத்தமானது, அங்க கடவுள் இருக்கிறார். Rent Hall, A/C Hall, Meha Church இப்படிபட்ட இடங்கள்ள பரிசுத்தமில்லை, அங்க ஆண்டவர் இல்லைன்னு சொல்றீங்களா?

ஞா. ப. ஆ. சங்கம்: நான் அப்படி சொல்ல வரல. நீங்க எப்பவுமே பாஸ்டர் ஷூ போட்டுருக்கார், ஜீன்ஸ் பேண்ட், Round Calar / Tshirt போட்டுருக்கார்ன்னு சொல்றீங்க. அதான் சொன்னேன்.

ஆ. ஐ. சங்கம்: நம்ம வேணா ஆலயத்தை A/C பண்ணிரலாமா.

கோ. குட்டி: ஐயா நீங்க எப்பமே செலவு செய்றதையே யோசிக்கிறீங்க. காரியத்தை முடிப்போம்.

இ. த. ஐக்கியம்: நான் சொல்றது என்னன்னா? நம்ம வாழ்ற தேசம் கடவுளுக்குப் பயப்படற தேசம், கடவுளுக்கு செலுத்துகிற மரியாதையின் நிமித்தமாக ஆலயத்துக்குப் போகும்போது செருப்பைக் கழட்டுவாங்க. ஒரு பெரிய நபரப் பார்க்கப்போனா அவருடைய ரூம் முன்னாடி செருப்பைக் கழட்டிட்டுப் போவாங்க. நமக்குன்னு ஒரு கலாச்சாரம் இருக்கு. நம்ம சுற்றியிருக்கிற இஸ்லாமிய ஜனமோ, இந்து ஜனமோ அவுங்க தொழுகை ஸ்தலத்துக்கு வெளியே செருப்பைக் கழட்டிடுவாங்க. காரணம் கடவுள் மேல இருக்கிற பக்தி, பயம், மரியாதை. எல்லாத்துக்கும் மேல தன்ன தாழ்த்துகிறது என்ற ஒரு உணர்வு. இங்க நம்ம பேசுறது உலகமயமாதல், மாடர்னிசேஷன், நகர வாழ்க்கையோ அல்ல. இப்படிப் பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை.

கோ. குட்டி: சரியா சொன்னீங்க தம்பி ! நம்ம இப்ப ஒரு முடிவுக்கு வருவோம். நம்ம யாருக்குக் கனம் செலுத்தப் போகிறோம், யாரை ஆராதிக்கப் போகிறோம், அப்படிங்கிற உணர்வும், அவரைப் பார்க்க தன்னைத்தானே தாழ்த்த வேண்டும் என்ற மனநிலையும் தான் முக்கியம். தாழ்மை மனசுல இருந்தா போதும். அதை வார்த்தையில் காட்டாமல், சக இந்தியன் முன்னாடி செயலிலும் காட்டுவோம்.

## பக்தி நிறைந்த தேசம்!!
## பரனின் பாதம் பணிய பக்தியோடு பாதரட்சையைக் கழட்டுவோம்!!



அடுத்த விவாதகளத் தலைப்பு,

**"விசுவாசப் பிரமாணம்" தெரியுமா? தெரியாதா? வேணுமா? வேண்டாமா?**

உங்கள் கருத்துக்களை கீழே காணும் வாட்ஸ்அப் நம்பரில் தெரியப்படுத்துங்கள். விவாதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

**Mobile No.: 94450 40148**

**வயலின் ஊழியக்களம்**

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!



**கார்பா பணித்தளம்**
**நாராயணபூர் மாவட்டம்**
**சத்தீஸ்கர் மாநிலம்**

PRAYER POINTS - FMPB FIELD

Mr. Suriya Kumar

தூசு படிந்த கலிலேயா வீதிகள்! தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என கூச்சல்கள் ஒரு பக்கம், கூரையைப் பிரித்து நோயாளிகளை இறக்கும் கூட்டம் மறுபுறம், குற்றம் சாட்டத் துடிக்கும் பரிசேயர்கள், சிக்க வைக்கத் துடிக்கும் சதுசேயர்கள் இவர்கள் மத்தியில் எல்லாவற்றிலும் மெய்சிலிர்த்துப் போகும் பொது ஜனம். ஆனால் இயேசுவின் இருதயமோ இவைகளில் திருப்தியடைந்து விடவில்லை. அடுத்த ஊருக்குப் போவோம் வாருங்கள் என உசுப்பிவிட்டார் சீஷர்களை.

அவ்வண்ணமே சில மக்கள் இனங்களில் மாபெரும் அறுவடை மலரும் சுதேஷ திருச்சபைகள், கல்வி சுகாதாரத்தில் மேம்பாடடையும் மக்களின் காட்சி நம்மைச் சுருக்கிவிடவில்லை, நம் தரிசனத்தைக் கருக்கி விடவில்லை. மாறாக அடுத்த ஊருக்குப் போவோம் வாருங்கள் என நமது ஊழியர்கள் உரக்க உச்சரிக்கின்றனர். அதன் விளைவாகப் புதிய எல்லைகளை ஆய்வு செய்து புதிய பணித்தளங்களைத் திறக்க திட்டமிட்டுக் கொண்டே இருக்கிறோம். கடந்த ஆண்டு ஆய்வு செய்து 2026ஆம் ஆண்டில் பணித்தளம் திறக்கக் காத்திருக்கும் பணி எல்லைகளின் கதை இது.

### கார்பா பணித்தளம், நாராயணபூர் மாவட்டம், சத்தீஸ்கர் மாநிலம்:

மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்கள் சங்கமிக்கும் பகுதி சத்தீஸ்கர் மாநிலத்தின் தென்மேற்குக் கோடியில் அமைந்துள்ள மாவட்டம் இது.

### சமூக சூழல்:

இங்கு கல்வி அறிவு வெறும் 20% மட்டுமே. இவர்களில் பெண்கள் வெறும் 5% மட்டுமே. ஏனென்றால், இங்கு நக்சல்வாதிகளின் நடமாட்டம் அதிகம். மண்ணும், மரமும், தண்ணீரும் எங்களுடையதே என ஆயுதம் ஏந்திப் போராடுவதால் அரசாங்கத்தின் திட்டங்கள் சரிவர செயல்படுவதில்லை. நக்சல்வாதிகள் மனம் வைக்காமல் பாலங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் கட்டுவது இயலாத ஒன்று. இன்றும் நரபலி கொடுப்பது இவர்கள் மத்தியில் உண்டு.

### மத நம்பிக்கைகள்:

இப்பகுதி மக்கள் ஆவி வணக்கம் மற்றும் மூதாதையர் வழிபாடு செய்கின்றனர். விதை பண்டிகை, தீபாவளி, ஹோலிப் பண்டிகைகளைக் கொண்டாடி, இதை ஓய்வு நாளாக அனுசரிக்கின்றனர். இங்கு மாடியா அக்கவுண்ட் பழங்குடி மக்கள் அதிகம் வாழ்கின்றனர். இங்குள்ள மொத்தம் 210 கிராமங்களில், சுமார் 185 கிராமங்களில் மாடியா கோண்டு மக்கள் உள்ளனர்.

### பிரகாசமான வாய்ப்புகள்:

மகாராஷ்டிரா மாநிலம் எட்டப்பள்ளி, சத்தீஸ்கர் மாநிலம், பாண்டே போன்ற பணித்தளங்கள் இப்பகுதிக்கு மிக அருகாமையில் உள்ளது. அவர்கள் மத்தியில் நமக்கு நிறைய விசுவாசிகள் உண்டு. ஆலப்பள்ளி என்ற இடத்தில் சிறுவர் விடுதி நடத்துகிறோம். இவர்கள் இந்த புதிய எல்லைக்கு வந்து ஊழியத்தில் உதவி செய்யக்கூடும். அதனால் மக்கள் இயக்கம் (People Movement) தோன்ற வாய்ப்புகள் அதிகம்.

கோண்டி மொழியில் புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழியில் இயேசு திரைப்படமும் உண்டு. இவர்கள் பேசும் மொழி திராவிட குடும்பத்தை சேர்ந்ததால் தமிழரான நமக்கு மொழி கற்பது இன்னும் எளிது.

தரிசனம் பெற்ற வாலிபர்களே! மாடியா கோண்டு மக்கள் மன்னவனை அறிய நீ வருவாயா?

நவீன யுகத்திலும் நரபலி
கொடுக்கும் மாடியா கோண்டு மக்கள்
கிருபாதாரபலியாம் இயேசுவை அறிய நீ
வருவாயா ?



சிக்கிள் செல் வியாதியால் பாதிக்கப்பட்டு வலியால் துடிக்கும் இவர்களுக்கு வலிபோக்கும் மருத்துவப் பணியாளனாக நீ வருவாயா ?

### ஜெபக்குறிப்புகள்:

- நவீன யுகத்திலும் நரபலி கொடுக்கும் மாடியா கோண்டு மக்கள் கிருபாதாரபலியாம் இயேசுவை அறிய
- கல்வி அறிவில் பின்தங்கிய நிலையிலுள்ள இம்மக்கள் கல்வி அறிவு பெற
- மண்ணும், மரமும், தண்ணீரும் எங்களுடையதே என ஆயுதம் ஏந்தி போராடும் நக்சல்வாதிகள் மனந்திரும்ப
- சிக்கிள் செல் வியாதியினால் பாதிப்புக்குள்ளாகி மரணத்தோடு போராடும் இம்மக்களுக்கு மருத்துவ உதவிகள் கிடைக்க ஜெபிப்போம்.



# பிரேசில்



தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நாடான பிரேசில், உலகின் ஐந்தாவது பெரிய நாடாகும். இது கண்டத்தில் கிட்டத்தட்டப் பாதியை ஆக்கிரமித்துள்ளது. இது 10 நாடுகளின் எல்லையாக உள்ளது: அர்ஜென்டினா, பொலிவியா, கொலம்பியா, கயானா, பராகுவே, பெரு, சுரினாம், உருகுவே, வெனிசுலா மற்றும் பிரெஞ்சு கயானா (பிரான்சின் வெளிநாட்டுப் பகுதி). கிழக்கே, பிரேசில் 7,000 கி.மீ.க்கு மேல் நீண்ட அட்லாண்டிக் பெருங்கடல் கடற்கரையைக் கொண்டுள்ளது. இந்த நாடு பெரும்பாலும் வெப்பமண்டலத்தில் அமைந்துள்ளது, இது வெப்பமான காலநிலையையும் அமேசான் மழைக்காடுகள் போன்ற பரந்த இயற்கைப் பகுதிகளையும் கொண்டுள்ளது.

- ✦ **தலைநகரம்**: பிரேசிலியா
- ✦ **நாணயம்**: பிரேசிலிய ரியல்
- ✦ **அதிகாரப்பூர்வ மொழி** : போர்த்துகீசியம்
- ✦ **அரசியல் அமைப்பு** : கூட்டாட்சி ஜனாதிபதி குடியரசு
- ✦ **மக்கள் தொகை** : சுமார் 213.4 மில்லியன் (2025 மதிப்பீடு)
- ✦ **விசுவாசத்தின் திருவிழாக்கள்**: ஃபெஸ்டா டோ டிவினோ எஸ்பிரிடோ சாண்டோ (தெய்வீக பரிசுத்த ஆவியின் விருந்து)
- ✦ **கத்தோலிக்க தேவாலயம்**: அவர் லேடி அபரேசிடாவின் கதீட்ரல் பசிலிக்கா

பிரேசில் ஒரு வளமான பாரம்பரியத்தையும், வலுவான கிறிஸ்தவ பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது. இது 16ஆம் நூற்றாண்டில் ஜேசுட் மிஷனெரிகள் போர்த்துகீசிய குடியேறிகளுக்கு கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்தியபோது தொடங்கியது. இன்று, பெரும்பாலான பிரேசிலியர்கள் தங்களைக் கிறிஸ்தவர்களாக அடையாளம் காண்கிறார்கள். மேலும் இயேசு மீதான நம்பிக்கை அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக உள்ளது. இது விளையாட்டு, குடும்பப் பழக்கவழக்கங்கள், மத கொண்டாட்டங்கள் மற்றும் சமூக மதக் கோட்பாடுகளில் பிரதிபலிக்கிறது. பிரேசில் உலகின் மிகப்பெரிய கத்தோலிக்க நாடாக உள்ளது. இங்கு, சுவிசேஷ தேவாலயங்கள் விரைவாக வளர்ந்து வருகின்றன, இப்போது இருக்கும் மக்கள்தொகையில் கால் பங்கிற்கும் அதிகமாக சுவிசேஷ தேவாலயங்கள் உள்ளன. பிரேசிலுக்குள் மிஷனெரி பணிகள் தொலைதூர பழங்குடியினரைச் சென்றடைந்து, விசுவாசிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றன. பிரேசிலை நற்செய்தியைப் பெறுபவராகவும், அனுப்புபவராகவும் மாற்றுகின்றன. இது சமீபத்திய ஆண்டுகளில், புராட்டஸ்டன்ட் மற்றும் சுவிசேஷ சமூகங்களுக்குள்ளும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. மக்கள்தொகையில் அவர்களின் பங்கு 2010இல் 21.6%த்திலிருந்து 2024இல் 29.8%ஆக உயர்ந்துள்ளது. இது பிரேசிலின் மத நிலப்பரப்பில் ஒரு பெரும் மாற்றத்தையும், சுவிசேஷ ஊழியத்தில் அதிகரித்து வரும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது.

பிரேசிலிய விளையாட்டு வீரர்கள் நீண்ட காலமாக தங்கள் நம்பிக்கையை உலக அரங்கில் கொண்டு சென்றுள்ளனர். கால்பந்து ஜாம்பவான்களும், ஒலிம்பிக் சாம்பியன்களும் பெரும்பாலும் கிறிஸ்துவுக்கு சாட்சியளிக்கிறார்கள். கிறிஸ்துவின் தடகளங்கள் போன்ற இயக்கங்கள் விளையாட்டு வீரர்களை ஜெபத்தில் ஒன்றிணைக்கின்றன. கிறிஸ்துவின் மீதுள்ள பொது பக்தி மில்லியன் கணக்கானவர்களை ஊக்குவிக்கிறது. விசுவாசம் தேவாலயத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையின் ஒவ்வொரு அரங்கிலும் திகழ்கிறது என்பதை இது காட்டுகிறது.

**பிரேசிலுக்கான ஜெபக்குறிப்புகள்**:

✦ **தேவாலயங்கள் மற்றும் ஆன்மீக வளர்ச்சி** :

- ▸ பிரேசிலில் கிறிஸ்தவம் மூன்று வகைகள், அதாவது, கத்தோலிக்கர்கள் (வரலாற்று ரீதியாக மிகப்பெரிய குழு – 120 மில்லியனுக்கும் அதிகமானோர்), சுவிசேஷகர்கள் (வேகமாக வளர்ந்து வரும் குழு), பெந்தெகோஸ்தே நியோ– பெந்தெகோஸ்தே தேவாலயங்கள்.
  - ▸ இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
  - ▸ விசுவாசிகள் தங்கள் சமூகங்களுக்கு மிஷனெரி பணிச் செய்ய ஜெபிப்போம்.

✦ **பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம்**:

- ▸ 2014 முதல் 2024 வரை, குழந்தைகளுக்கு வன்முறை தொடர்பான பிரச்சனைக் கிட்டத்தட்ட இரு மடங்காக (378 முதல் 720 வரை) அதிகரித்துள்ளது என்றும், அந்த வழக்குகளில் 70%க்கும் மேற்பட்டவை குடும்பத்திற்குள் நடக்கும் பாலியல் வன்முறைகள் என்றும், பாதிக்கப்பட்டவர்களில் பலர் சிறுமிகள் என்றும் ஒரு முன்னணி குழந்தைகள் மருத்துவமனை சமீபத்தில் தெரிவித்துள்ளது. மேலும், பெண் கொலை 2025இல் சாதனை அளவை எட்டியுள்ளது. இந்த வகையான குற்றங்கள், வன்முறை மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறுமிகளின் பாதுகாப்பிற்காக நாம் ஜெபிப்போம்.
- ▸ பல PHC (ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு) மருத்துவர்கள் அதிக சுமையுடனும், தனிமைப்படுத்தலுடனும் இருப்பதையும், இந்த சுகாதாரப் பராமரிப்புப் பிரிவுகளில் அத்தியாவசிய உபகரணங்கள் (ICUs, வென்டிலேட்டர்கள், ஆய்வகங்கள்) இல்லாததையும் “தொலைதூர கிராமப்புற நகராட்சிகள்” (RRMs) என்ற அமைப்பு கண்டறிந்துள்ளது, குறிப்பாக தொலைதூரப் பகுதிகளில், சரியான உள்கட்டமைப்பு, போக்குவரத்து வசதிகள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் குணப்படுத்துதலுக்காக ஜெபிப்போம்.

## “சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்”. (மத்தேயு 19:14)

# பணித்தள சிறுவர் ஊழியத்தின் கரிசனைகள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிறுபிள்ளைகளை அதிகமாய் நேசிக்கிறார். சிறுபிள்ளைகளைப் போல நாமும் மாற வேண்டும் என கற்பித்திருக்கிறார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழிய துவக்கமே சிறு பிள்ளைகள் மத்தியிலான ஊழியங்கள் தான் என்பது நாமனைவரும் அறிந்ததே. இப்பொழுதும் நமது ஊழியப் பணி எல்லைகளிலே திரள் எண்ணிக்கையில் வாழும் சிறுவர்களை இயேசுவண்டை வழிநடத்த செய்யப்பட்டு வருகின்ற மற்றும் செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக நாம் ஜெபிப்போம்.

ஜெபக் கரிசனைகள்:

- நமது பணித்தள திருச்சபைகள் அனைத்திலும் ஞாயிறு பள்ளி வகுப்புகள் கிரமமாக நடைபெற ஜெபிப்போம்.
- ஞாயிறு பள்ளிக்கான 52 வார பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி கையேடுகள் அந்தந்த மக்களின் மொழிகளில் ஆயத்தப்படுத்தப்படவும், அனைத்து சபைகளிலும் ஆசிரியர்கள் கண்டறியப்பட்டு முறையான பயிற்சிகள் கொடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- நமது அனைத்து பணித்தள சபைகளிலுள்ள சிறுவர்களுக்கு சீரான, கிரமமான வேத போதனைகள் கொடுக்கப்படுவதற்கு ஏதுவாக தேசிய அளவிலான சிறுவர் ஊழிய ஒருங்கிணைப்பு மையம் உருவாக்கப்படவும், வாஞ்சையுள்ள ஊழியர்கள் நியமிக்கப்படவும் ஜெபிப்போம்.
- சபைகள் இல்லாத கிராமங்களில் இயேசுவை அறியாத சிறுவர்களுக்கு, ஞாயிறு பள்ளி வகுப்புகள் நடத்த தேவன் திரளான தன்னார்வ ஊழியர்களை எழுப்பவும், பணித்தளங்கள்தோறும் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- பணித்தள சபைகளில் ஆண்டுதோறும் விடுமுறை வேதாகமப் பள்ளி வகுப்புகள் தவறாமல் நடைபெறவும், அதன் மூலம் விசுவாச குடும்பத்தினரின் பிள்ளைகள் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.
- விடுமுறை வேதாகம பள்ளி ஊழியத்தின் மூலம் கிறிஸ்தவரல்லாத பிற சிறுவர்களும் இயேசுவின் அன்பை அறிந்து ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- நமது பணித்தளங்களிலுள்ள சிறுவர்களுக்கு வேத போதனைகள் கற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக அந்தந்த மொழிகளில் சிறுவர்களுக்கு ஏற்ற விதமாக, சிறு சிறு வேதாகமக் கதைப் புத்தகங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்பட ஜெபிப்போம்.
- பணித்தள சிறுவர்களுக்கு எளிய முறையில் வேதாகமத்தைக் கற்றுக் கொடுக்க, அவர்களுடைய மொழிகளிலேயே பாடல்கள், குறு நாடகங்கள், கார்ட்டூன், அனிமேஷன் போன்றவைகள் ஆயத்தப்படுத்தப்பட ஜெபிப்போம்.
- நமது பணித்தளங்களில் சிறுவர்கள் மத்தியிலான ஊழியத்தைத் தீவிரப்படுத்த ஒவ்வொரு பிராந்தியத்திலும் சிறுவர் ஊழியத்திற்கென பிரத்தியேகமாக ஊழியர்கள் நியமிக்கப்பட ஜெபிப்போம்.
- பணித்தள சிறுவர்கள் மத்தியிலான ஊழியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவும், முறையான கலந்தாய்வு மற்றும் பின்தொடர்பணிகள் நடைபெறவும் ஜெபிப்போம்.
- சிறுவர்களை வழிநடத்த தரிசனமுள்ள ஊழியர்கள் மற்றும் தன்னார்வ தலைவர்களைப் பணித்தளங்களில் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.
- நமது பள்ளிகள், பகல் நேர பராமரிப்பு மையங்கள் மற்றும் விடுதிகளில் கல்வி பயிலும் சிறுவர்கள் அனைவரும் இயேசுவின் சாட்சிகளாக எழும்ப ஜெபிப்போம்.
- நமது பணித்தளங்களிலுள்ள கிராமங்களில் வாழும் அனைத்து சிறுவர்களும் இயேசுவின் அன்பினை அறிந்து ஏற்றுக் கொள்ளும் பாக்கியத்தைத் தேவன் தர ஜெபிப்போம்.



Dr. Godwin & Dr. Azubha

# மனச்சோர்வு நோய்

## DEPRESSION DISORDER

### என்ன?

மனச்சோர்வு நோய் என்பது ஒருவர் நீண்டகாலமாக நம்பிக்கையின்மை, ஆர்வமின்மை, ஆற்றல் குறைந்த நிலை போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாகும். இது ஒரு நபரின் சிந்தனை, உணர்ச்சிகள், நடத்தை, தூக்கம் போன்ற அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கிறது.

### ஏன்?

அன்புக்குரியவரை இழத்தல், உறவு முறிவு (Breakup), தோல்வி, வேலை அழுத்தம், குடும்ப பிரச்சனைகள் அல்லது நீண்டகால உடல் உபாதைகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும்போது இந்த மனச்சோர்வு ஏற்படுகிறது.

### எப்படி?

- ✦ பெரும்பாலான நாட்களில் வெறுமை, குற்ற உணர்வு மற்றும் தன்மேல் நம்பிக்கையில்லாத உணர்வு.
- ✦ விரும்பிய விஷயங்களில் ஆர்வம் குறைதல்.
- ✦ அதிகமாக தூங்குதல்.
- ✦ கவனம் செலுத்துவதில் சிரமம்.
- ✦ தனிமையில் இருக்க விரும்புதல்.
- ✦ கடுமையான சந்தர்ப்பங்களில் தன்னைக் காயப்படுத்தும் எண்ணங்கள் தோன்றலாம்.

### சிகிச்சை செய்ய முடியுமா?

**ஆம்,** மனச்சோர்வு முழுமையாக குணப்படுத்தக்கூடியது. மனநல ஆலோசனை, உளவியல் சிகிச்சை, அதற்குரிய மருந்துகளை உட்கொள்ளுதல், தூக்கம், உடற்பயிற்சி, ஆரோக்கியமான தினசரி பழக்கங்களை மேற்கொள்ளுதல் போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்கள் மற்றும் குடும்பம் மற்றும் நண்பர்களின் ஆதரவு.



### அறிகுறிகளை நீங்கள் கவனித்தால் என்ன செய்யலாம்?

- ✦ நம்பிக்கையான ஒருவரிடம் பேசுங்கள்.
- ✦ மனநல ஆலோசகரை அல்லது மருத்துவரை அணுகுங்கள்.
- ✦ தனித்திருப்பதைத் தவிர்க்கவும்.
- ✦ போதுமான ஓய்வு எடுத்து, சிறிய நல்ல செயல்களில் ஈடுபடவும்.

### புள்ளிவிவரங்கள்:

1. Global Burden of Disease ஆய்வின்படி, இந்தியாவில் சுமார் 197 மில்லியன் பேர் (7 பேரில் ஒருவர்) மனநல பிரச்சினைகளினால் (மனச்சோர்வு மற்றும் கவலைக் கொள்தல்) பாதிக்கப்பட்டுள்ளனர்.
2. WHO தகவலின்படி, இந்தியாவில் சுமார் 20 பேரில் ஒருவர் (5%) மனச்சோர்வால் பாதிக்கப்படுகின்றனர்.
3. கல்லூரி மாணவர்களில் சுமார் 50 – 60% பேர் மனச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டுள்ளனர்.
4. பதின் பருவத்தினர் (வயது 10 – 19) சுமார் 20% பேர் மனச்சோர்வு, கவலை அல்லது அதற்கு தொடர்புடைய மனநலப் பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### ஜெபக்குறிப்புகள்:

1. பல்வேறு காரணங்களினால் மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கர்த்தர் ஆறுதல் அளிக்க
2. தோல்வி, இழப்பு போன்ற சூழ்நிலைகளில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த கர்த்தர் உதவி செய்யும்படி
3. அன்றாட வேலைகள், படிப்பு, வேலை ஸ்தலங்களில் உள்ளவர்கள் மற்றும் உறவுகளை எதிர்கொள்ள தேவையான வலிமைக்காக
4. மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனித்துக்கொள்வோருக்கு கர்த்தர் அவர்கள்மேல் அன்பும், கருணையும் கொண்டு அவர்களைக் கையாள வலிமை அளிக்க, இவர்கள் மனச்சோர்விலிருந்து வெளிவர
5. கர்த்தருடைய அன்பும், கருணையும் கொண்டு ஆலோசனை வழங்கக்கூடிய பல கிறிஸ்தவ ஆலோசகர்கள் உருவாக ஜெபிப்போம்.

# உதய நேரத்தில் ஓர் சந்திப்பு



விடியலுக்கு காத்திருந்த சந்தால் மக்களுக்கு விடியலை கொடுத்த அருட்பணியாளர் அருட்திரு. ஜெபராஜ் அண்ணன் குடும்பம்

**கேள்வி: Praise the Lord, அண்ணா**

அருட்பணியாளர் பதில்: Praise the Lord, Brother

**கேள்வி: அண்ணா உங்களைப் குறித்து சொல்லுங்கள்.**

அருட்பணியாளர் பதில்: நான் கேரளா மாநிலத்திலுள்ள அரனக்கல் என்ற இடத்தில் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் இரட்சிப்பு எப்பொழுது ஏற்பட்டது?**

அருட்பணியாளர் பதில்: கல்லூரி நாட்களில் பிரசங்கி 12:1இன்படி எனது வாழ்கையை இயேசுவுக்கு ஒப்படைத்து புதிய வாழ்க்கை வாழ ஆரம்பித்தேன்.

**கேள்வி: மனமாற்றத்திற்குப் பிறகு உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

அருட்பணியாளர் பதில்: கிறிஸ்துவுக்கு பிரியமாய் வாழ்வதற்கு, உலக வேலை செய்வதா அல்லது ஊழியம் செய்வதா? உலக வேலை செய்து கொண்டே ஊழியம் செய்வதா? ஊழியம், உலக வேலை இதில் எது சிறந்தது? என்று மிகவும் குழப்பத்தில் இருந்தேன்.

**கேள்வி: பிறகு நீங்கள் எடுத்த தீர்மானம் என்ன?**

அருட்பணியாளர் பதில்: உலக வேலை இவ்வுலகத்திற்குரியது. ஆனால் ஊழியம் இம்மைக்கும், அழியாத மறுமைக்கும் உரியது. ஆகவே நான் ஊழியம் செய்ய தீர்மானித்தேன்.

**கேள்வி: கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்தி பணி செய்ய வேண்டும் என்ற தாகம் எப்படி வந்தது?**

அருட்பணியாளர் பதில்: பெத்தேல் வேதாகம கல்லூரியில் (டேனிஷ்பேட்) 1980-81 அருள்திரு. அலெக்ஸ் மற்றும் நத்தானியேல் அவர்கள் வட இந்திய ஊழியம் மற்றும் அதன் தேவைகளைப் பகிர்ந்து கொண்டபோது ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன்.



**கேள்வி: ஊழியத்திற்கு வந்த பிறகு களத்தில் நீங்கள் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: ஊழியத்தின் பாதையில் மொழி, கலாச்சாரம், காலசூழ்நிலை போன்றவை முற்றிலும் வேறுபட்டதாயிருந்தது. பெற்றோர், உறவினர்களை சந்திக்க முடியாத சூழ்நிலை. ஊழியத்தில் வந்த எதிர்ப்புகள் என சந்தித்த பாடுகள், போராட்டங்கள் அதிகம்.

**கேள்வி: ஊழியத்தின் பாதையில் தேவன் தந்த தரிசனம் என்ன?**

அருட்பணியாளர் பதில்: எந்த சூழ்நிலையிலும் ஊழியத்தை விட்டு பின் வாங்காமல், தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டும் என்பதே.

**கேள்வி: தரிசனத்தை நிறைவேற்ற நீங்கள் எந்த இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்தீர்கள்?**

அருட்பணியாளர் பதில்: ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள சந்தால் மக்கள் மத்தியில் ஊழியம் செய்தேன். பெருங்கூட்ட மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். சில ஆயிரம் மக்களுக்கு திருமுழுக்கு கொடுக்க தேவன் கிருபை செய்தார்.

**கேள்வி: சந்தால் மக்களைக் குறித்து சொல்லுங்கள்?**

அருட்பணியாளர் பதில்: சந்தால் மக்கள் ஜார்கண்ட், பீகார், மேற்கு வங்காளம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் சுமார் ஒரு கோடி பேர் வாழ்கின்றனர். இவர்கள் காடுகளின் ஓரங்களிலும், நதிக்கரைகளிலும் வசிக்கின்றனர். மேலும் ஆவி வணக்கத்தை பின்பற்றுகின்றனர். இவர்களின் விருப்பமான உணவு பன்றி மாமிசம்.

**கேள்வி: சந்தால் மக்கள் மத்தியில் நம் இயக்கம் செய்த ஊழியத்தினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சந்தால் மக்கள் ஆவி வணக்கத்திலிருந்து விடுதலைப் பெற்று இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக உள்ளனர். குடி பழக்கத்திற்கு அடிமையாயிருந்த இம்மக்கள் அதிலிருந்து விடுதலையாகியுள்ளனர். இங்குள்ள விசுவாசிகளின் பிள்ளைகள் கல்வி கற்று சமுதாயத்தில் உயர்ந்து வருகிறார்கள்.

**கேள்வி: சந்தால் மக்களைக் குறித்து உங்கள் தரிசனம் என்ன?**

அருட்பணியாளர் பதில்: சுமார் ஒரு கோடி சந்தால் மக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்த நோக்கத்தை நிறைவேற்றினார். அதுபோல அப்போஸ்தலர் செய்த ஊழியத்தை நாமும் செய்ய வேண்டும். இதை தொடர்ந்து செய்ய நமக்கான வாய்ப்பு உள்ளது. ஆகவே அர்ப்பணமுள்ள வாலிபர்கள் எழும்ப வேண்டும்.

**கேள்வி: சந்தால் மக்களுக்காக எங்கள் வாலிபர்கள் ஜெபிக்க குறிப்புகளை Share பண்ணுங்க அண்ணன்?**

ஜெபிக்க:

- ஒரு கோடி சந்தால் மக்களும் இயேசுவை ஏற்றுக் கொள்ள...
- அரசாங்கத்தால் வரும் இடையூறுகள் விலக...
- பிள்ளைகளுக்கு கல்வி வசதியும், வாய்ப்புகளும் கிடைக்க...
- ஆவி வணக்கம் முற்றிலும் அகன்று போக ஜெபிப்போம்.



# FOFO / FOMO

Mrs. Jeba Saral

*FOFO / FOMO என்றால் Fear of Finding out, Fear of Missing out. மேற்கத்திய நாடுகளில் பிரபலமான இவ்வகை அச்சுறுத்தல்கள், இப்பொழுது நம்முடைய இந்தியாவிலும் வேகமாக பரவி வருகிறது. சமீபத்திய காலங்களில், தாய்மார்களே, தங்கள் குழந்தைகளிடம் போட்டி போடுகின்றனர். ஒரு தாயே, தன் குழந்தையிடம் உள்ள நீள முடி, அவர்களிடம் இல்லை என்பதால், செயற்கை முடியினை உபயோகித்து, அதற்கு நிகராக மாற்றி விடுகின்றனர். இது முற்றிலுமாக FOMOவின் தாக்கம்!!! தங்களுடைய பொருளாதாரத்தை மிஞ்சி, மற்றவர்கள், தங்களை மதிக்க வேண்டும் என்பதற்காக பலர் கடன் மேல் கடனை வாங்கி, வீடு வாசல்களைக் கட்டி, பின்னர் கடன் சுமையினால் பாதிக்கப்பட்டு, தற்கொலை செய்துக்கொள்கிற குடும்பங்களின் எண்ணிக்கை இப்பொழுது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது, இதுவும் FOMOவினால் உண்டாவது தான். பலருக்கு தங்களுடைய உடல் நலத்தைப் பற்றியோ, அவர்களது வருவாய் அல்லது பொருளாதார நிலையைப் பற்றியோ சுற்றத்தார் அறிந்து விடுவார்களோ என்கிற பயம் எழுகிறது. தாங்கள் ஒரு மோசமான நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றோ, தங்களுக்கு ஒரு சொந்த வீடு இல்லாமல், வாடகை வீட்டில் இருக்கிறோம் என்ற நிலையை பிறர் அறிந்தால், தங்களோடுள்ள உறவைத் துண்டித்து விடுவார்கள் மற்றும் அவர்களது status கம்மியாகிவிடும் என்கிற பயத்தோடு இருக்கிறதை நாம் FOFO, FOMO என்று கூறலாம். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தங்களுடைய தகப்பனின் வேலையை உதாசீனமாக எண்ணி, தன்னுடைய சக மாணவர்களுக்கு சொல்வதால் நட்பு கெட்டுவிடுமோ என்னும் பயத்திலுள்ளனர். மேலும் பலர் தாங்கள் இந்த இனத்தை அல்லது ஊரைச் சார்ந்தவர்கள் என்று கூட சொல்லிக்கொள்ள வெட்கப்படுகின்றனர்.*

**ஜெபக்குறிப்புகள்:**

- *இன்றைய கிறிஸ்தவ வாலிபர்கள் தங்களுடைய மார்க்கத்தைக் குறித்தோ, தங்களுடைய கர்த்தரைக் குறித்தோ வெட்கப்படாமல் மற்றவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க...*
- *தங்களுடைய நண்பர்களுக்காக, சாட்சியின் வாழ்க்கையை விட்டு விடாதபடி, தேவன் எல்லா வாலிபர்களையும் பாதுகாக்க...*
- *தங்களுடைய பொருளாதார நிலையைக் குறித்தோ, தங்களுடைய சுகவீனத்தைக் குறித்தோ சோர்ந்து போகாமல், கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க, அவர்களுக்கு தேவ பெலன் உண்டாக...*
- *மற்றவர்கள் தங்களைக் குறித்து என்ன நினைத்துவிடுவார்களோ என்ற எண்ணத்தில் கடன் பட்டு, பல நஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களைத் தேவன் விடுதலையாக்க...*
- *FOFO / FOMO பிடியில் இருக்கும் வாலிபர்கள், தங்களுடைய கர்த்தரின் மகிமையை உணர்ந்து, விசுவாசத்தில் உறுதியாயிருக்க...*
- *சிறைச்சாலை அனுபவத்தை யோசேப்புப் பெற்றிருந்தும், தேவன் அவனோடு இருந்ததால், அவன் ஒரு அதிபதியானது போல, தற்போதைய சூழ்நிலையை நினைத்து பயப்படாமல், அதை தைரியத்தோடும், தேவ பெலத்தோடும் மேற்கொள்ள...*
- *வாலிபர்களிடையே தேவையில்லாத, உலகக் கவலைகளைக் கொடுக்கும் பிசாசின் வல்லமைகளைக் கர்த்தர் முறியடிக்க...*
- *பணம், பொருள், அழகு மற்றும் அந்தஸ்து ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கர்த்தரை மறந்து திரியும் வாலிபர்களைக் கர்த்தர் இரட்சிக்க ஜெபிப்போம்.*

மொழி களத்தில் வேதம்


# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)



### வேதாகம மொழி பெயர்ப்பு ஓர் அறிமுகம்:

கி.பி 1400களில் லத்தீன் மொழி வேதாகமம் ஒரு சிலரிடம் மட்டுமே இருந்ததால், திருச்சபை தவறான போதனைகளால் சீர்கெட்டிருந்த காலம். இதனால் சீர்திருத்த சிந்தைக் கொண்ட ஜாண் ஹஸ் மற்றும் ஜாண் விக்ளிஃப் என்பவர்கள் முறையே செக் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் வேதத்தை மொழி பெயர்க்கத் தொடங்கினர். இதைப் பொறுக்காத திருச்சபை, ஜாண் ஹஸ் மற்றும் வில்லியம் டிண்டேல் என்பவர்களை உயிரோடு நெருப்பில் கொளுத்தியது. இதனால் விசுவாசிகள் கையில் வேதாகமம் தவளத் தொடங்கியது



### மிஷனரி வரலாற்றில் மொழி பெயர்ப்புப் பணி

வில்லியம் கேமரான் டவுன்செண்ட் (William Cameron Townsend) என்பவர் தேவனுடைய ஊழிய அழைப்பைப் பெற்று மத்திய அமெரிக்கா நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள குவாட்டமாலா நாட்டிற்கு சென்று காச்சிக்கூல் என்ற மக்கள் மத்தியில் ஊழியம் செய்து கொண்டிருந்தார். கேமரான் ஸ்பானிக் வேதாகமத் துண்டு பிரதிகளை எடுத்துக் கொண்டு பிரசங்கித்து வந்தார். ஒரு நாள் அப்பகுதியிலிருந்த ஒருவர் “உங்கள் கடவுள் பெரியவரென்றால், எங்கள் மொழியில் ஏன் பேசவில்லை?” என்று கேட்டார். இக்கேள்வி வில்லியம் கேமரான் டவுன்செண்ட் அவர்களுக்கு ஒரு பெரிய சவாலாக அமைந்தது. இதனால் அவர்கள் பேசும் காச்சிக்கூல் மொழியை பத்து வருடங்களாக ஆராய்ச்சிச் செய்து, அம்மொழிக்கு எழுத்து வடிவம் கொடுத்து, அம்மக்களுக்கும் எழுத்துப் பயிற்சியும் கொடுத்தார். நீண்ட பிரயாசத்திற்குப் பின்பு 1931ஆம் வருடம், காச்சிக்கூல் மொழியில் புதிய ஏற்பாட்டை வெளியிட்டார்.

வில்லியம் கேமரான் ஜாண் விக்ளிஃப் அவர்களின் பெயரால் ஒரு வேதாகம மொழிபெயர்ப்புப் பள்ளியை ஆரம்பித்தார். முதல் வருடத்தில் 2 மாணவர்களே அப்பயிற்சியில் சேர்ந்தனர். 2ஆம் வருடம் அது 5ஆக மாறியது. 1942ஆம் வருடம், விக்ளிப் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். புரோட்டஸ்டாண்ட் மிஷன் இயக்கத்தில் இதுவே மாபெரும் வேதாகம மொழிபெயர்ப்பு அமைப்பாகும். 1951ஆம் வருடம், இவ்வமைப்பு தனது முதல் வேதாகமத்தை வெளியிட்டது. தற்பொழுது 400 மொழிபெயர்ப்புகள் அடங்கிய வேதாகமங்களைச் இச்சங்கம் வெளியிட்டுள்ளது.

### நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மொழி பெயர்ப்புப்பணி:

மொழி பெயர்ப்புப்பணி நம் பாரத தேசத்தில், பல வெளி நாட்டு மிஷனெரிகள் மூலமாக செயல்பட்டு வந்தது. சகோதரி எட்ணா, மற்றும் சகோதரி. ஆலிஸ் டாலிஸ் அவர்கள் பூனேவிலும் மற்றும் பலர் இந்தியாவின் பல பகுதிகளிலும் மொழிபெயர்ப்புப் பணியில் பணியாற்றி வந்தனர். ஆனால் இந்தியாவில் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடர்ந்து செய்ய முடியாத தடைச் சட்டம் வந்ததால், இந்தியாவிலிருந்தே வேதாகம மொழிபெயர்ப்பாளர்களை நாசிக்கில் வைத்து பயிற்றுவிக்கத் துவங்கினார்கள்.

இந்த விக்ளிப் குழு (WICLIFF) மற்றும் எஸ். ஐ. எல் (SIL - Summer Institute of Linguistics) அமைப்புகள் இன்றும் எப்படி மொழி, இலக்கணம் மற்றும் கலாச்சாரம் படிக்க வேண்டும் என்பதைப் பற்றியும், வேதாகம மொழிபெயர்ப்பைத் தெளிவாகவும், துல்லியமாகவும், மக்கள் புரிந்துக்கொள்ளும் வண்ணமாகவும் பயிற்சியை அளித்து வருகின்றனர்.



அதில் முதன்முதலில் நம் இயக்கத்திலிருந்து தேவ அழைப்பைப் பெற்று வேதாகம மொழிபெயர்ப்புப் பணியைத் துவங்கியவர்கள் Dr. Alaichami Paul and Dr. Christeena Alaichami Paul. இவர்கள் இங்கிலாந்து தேசத்திற்குச் சென்று வேதாகம மொழிபெயர்ப்புப் பயிற்சிப் பெற்று, குஜராத்திலுள்ள குக்னா மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்துத் தந்துள்ளனர்.

தற்போது 14 மொழிகளில் வேதாகம மொழிபெயர்ப்புப் பணி தேவ பெலத்தோடும், தேவ ஞானத்தோடும் திறம்பட செய்யப்பட்டு வருகிறது. அவை 1. மால்தோ, 2. சவுதரி, 3. வசாவி காந்தேசி 4. வசாவி அம்புடி 5.வசாவி தேவாலி 6. வார்லி டொகிரி 7.வார்லி நிஹிரி 8. வார்லி டாவ்ரி 9. ஹரியான்வீ, 10. டுங்ரா பீலி, 11. குருக்ஸ், 12. காந்தேஷ பீலி, 13. பாவ்ரி.14. குமார் பஹாடியா

### இன்றைய மொழி பெயர்ப்புப் பணியின் தேவை:

2011இன் கணக்கின்படி 19500 மொழிகள் தாய் மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. அதில் 74 மொழிகளில் முழு வேதாகமும், 92 மொழிகளில் புதிய ஏற்பாடும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. என்ன, தம்பி! தங்கைகளா! வியப்பாக இருக்கிறதல்லவா? இன்றும் நாம் வாழும் உலகில் 2,000க்கும் அதிகமான மக்களினங்கள் உள்ளனர். அவர்கள் மொழியில் வேதாகமம் இல்லாததால், கர்த்தர் எங்கள் மொழியில் பேசமாட்டாரா என்று ஏங்கும் அந்த மக்களுக்கு, உங்களின் பதில் என்ன? வில்லியம் கேமரானைப் போன்று நீங்களும் இப்பணிக்கு முழுமனதுடன் உங்களை அர்ப்பணிப்பீர்களா?

**"கர்த்தாவே, பிற மொழிகளில் வேதாகமத்தைக் கொண்டுவர என்னையும் ஒரு பாத்திரமாகப் பயன்படுத்தும். ஆமென்!"**

### ஜெபக்குறிப்புகள்:

★ கர்த்தர் எங்கள் மொழியில் பேசமாட்டாரா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களின் மொழியில் வேதாகமம் மொழிபெயர்த்து கொடுக்கப்பட

★ ஜாண் ஹஸ் மற்றும் வில்லியம் டிண்டேல் போல இன்றைய வாலிபர்கள் வேதாகம மொழி பெயர்ப்புப் பணிக்கு முழு மனதுடன் தங்களை அர்ப்பணித்து வர ஜெபிப்போம்.

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...



## யூத மத திருவிழாவின் போது ஆஸ்திரேலியாவின் பாண்டி கடற்கரையில் நடந்த பெருந்துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்காக, யூத சமூகத்துக்கு எதிரான வெறுப்பு நீங்கி, கொலைகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.




## இந்தியாவின் மிகப்பெரிய விமான நிறுவனம் கட்டுப்பாட்டை இழந்ததால் விமானப் பயணம் முழுவதும் குழப்பத்தில் ஆழ்ந்தது.

அனைத்து பயணிகள், விமானப் பணியாளர்கள், தரை பணியாளர்கள் இவர்களை தேவன் பாதுகாக்கும்படியும், சரியான பராமரிப்பு மற்றும் நாட்டின் சட்டங்களைப் பின்பற்ற மேலாண்மை தரப்பு நேர்மையில் நிலைத்திருக்க ஜெபிப்போம்.




## கொல்கத்தாவில் நடைபெற்ற மெஸ்சி நிகழ்ச்சியில் கோபமடைந்த ரசிகர்கள் நாற்காலிகளையும், பாட்டில்களையும் வீசினர்.

அரசியல்வாதிகள் மற்றும் பிரபலங்களால் ஏமாற்றப்படும் இந்திய வாலிபர்களுக்காகவும், உலகளாவிய விளையாட்டுகள் பிரபலங்களால் நீக்கப்படாமலிருக்கவும் ஜெபிப்போம்.



## இலங்கை நீரில் மூழ்கியது: பருவமழை வெள்ளம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தங்கள் உறவுகளை இழந்த குடும்பங்களுக்காகவும், தினசரி வேலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்காகவும், மேலும் இப்படிபட்ட இயற்கை பேரழிவுகள் ஏற்படாதபடி இலங்கையை கர்த்தர் பாதுகாத்து கொள்ளும்படியும் ஜெபிப்போம்.



## கோவா நைட்கிளப் தீ விபத்து: துயர நிகழ்வுக்கிடையில் உரிமையாளர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றனர்.

- சட்டவிரோத நைட்கிளப்புகள் மூடப்படவும், நம் நாட்டின் வாலிபர்கள் இதில் சிக்கி கொள்ளாதபடி பாதுகாக்கப்படவும், சட்டவிரோத நைட்கிளப்புகளின் மேல் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவும்
- பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு கர்த்தர் அன்பையும், ஆறுதலையும் கொடுக்க ஜெபிப்போம்.

# தமஸ்குவில் பவுலின் வைராக்கியம்

MR. ISRAEL NATHANIEL EDWARD



நீதியை விரும்பும் உணர்வுமிக்க மக்களைத் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். உணர்வின்மையை அவர் வெறுக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் லவோதிக்கேயா சபைக்கு அதன் வெதுவெதுப்பான நிலையைக் குறித்து இயேசு எச்சரித்தார்: "நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" (வெளி. 3:16). பவுல் அப்போஸ்தலர் கர்த்தர் விரும்பும் உணர்வுமிக்க நபராக இருந்தார். தாம் சரியானது என்று நினைத்ததைக் குறித்து வைராக்கியம் கொண்டிருந்தார். இருப்பினும், தேவன் அவரை சவால் விட்டு, மாற்றி, அவருக்கு ஒரு சரியான வாஞ்சையைக் கொடுத்தார். சரியான வாஞ்சை எவ்வாறு பல்வேறு கட்டங்களாக வளர்கிறது என்பதற்கு அவரது வாழ்க்கை முன்னுதாரணமாக இருக்கிறது. அவர் நமது கர்த்தராகிய இயேசுவைச் சந்திப்பதற்கு முன்பு எப்படி இருந்தார் என்பதிலிருந்து துவங்கலாம்.

### கிறிஸ்து இயேசுவைச் சந்திப்பதற்கு முன்பு பவுல்:

சவுல் என்று அப்போது அழைக்கப்பட்ட பவுல், ஸ்தேவானைக் கொன்ற மக்களின் ஆடைகளைக் காத்ததின் மூலம், அவரது மரணத்திற்கு தனது அங்கீகாரத்தை அளித்த இளைஞனாக பரிசுத்த வேதாகமத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறார் (அப். 7:58). கிறிஸ்து இயேசுவின் சீடர்களைக் கடுமையாக எதிர்த்த பரிசேயர்களின் குழுவில் பவுல் ஒரு தலைவராக இருந்தார் என்பதை இது குறிக்கிறது. அவர் மிகவும் வைராக்கியம் கொண்டிருந்ததால், இளம் வயதிலேயே இயேசுவையும், அவருடைய போதனைகளையும் எதிர்த்த பிரிவின் தலைவரானார். ஆனால், பவுல் பின்னாளில் பரிசேயரின் இந்த தவறான வைராக்கியத்தைக் கண்டித்தார். ஏனெனில், அவர்கள் தேவனிடமிருந்து வரும் நீதியை அறியாது, தங்கள் சொந்த நீதியை நிலைநாட்ட முயன்றார்கள் (ரோமர் 10:2, 3). பவுல் தவறான திசையில் இன்னும் முன்னேறிக் கொண்டிருந்தார். முதல் இரத்தசாட்சியான ஸ்தேவானைக் கொன்றதில் திருப்தி அடையாமல், அவர் எருசலேமிலிருந்த கர்த்தருடைய சீஷர்களைத் துன்புறுத்துவதைத் தொடர்ந்தார். பின்னர், தமஸ்கு போன்ற தொலைதூர இடங்களிலுள்ள சீஷர்களையும் துன்புறுத்த விரும்பி, அவர்களைத் தேடிப் புறப்பட்டார் (அப்.9:1, 2). ஆனால் அவர் தமஸ்குவை நெருங்கியபோது, அவரை முழுமையாக மாற்றி, ஒரு சரியான வாஞ்சையைக் கொடுக்க, கர்த்தராகிய இயேசு ஒரு பகல் நேர தரிசனத்தில் அவர் வாழ்வில் தலையிட்டார் (அப். 9:15,16). இது எனக்கு தேவனால் பயன்படுத்தப்பட்ட ஒரு மகானை நினைவூட்டுகிறது. அவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் மிஷனெரியான அருட்திரு. ஹாரிஸ் ஹில்டன் அவர்கள். இளம் ஹில்டன் ஒரு அரசியல் கட்சியின் கொள்கைகளால் பெரிதும் கவரப்பட்டவராக இருந்தார். அரசியல் நடவடிக்கை மூலம் தனது சமூகத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவர விரும்பினார். எனினும், தேவன் தன் மாபெரும் கிருபையினால், அவரைத் தொட்டு, ஒரு முன்மாதிரியான மிஷனெரியாக்கினார். இதனால் அவரைப்போல் தேவனுடைய நோக்கத்திற்காக வாழ்வதற்காக பலர் தம்மை அர்ப்பணிக்க ஏதுவாயிற்று. அன்பான இளம் வாசகர்களே! உங்கள் முழு வாழ்க்கையையும் ஆக்கிரமிக்கக்கூடிய ஒரு நீதியான பற்று உங்களுக்கு இருக்கிறதா? அது தேவனைச் சார்ந்ததாக இல்லாவிட்டாலும், அவர் உங்களை மாற்ற முடியும். அப்படிப்பட்ட பற்றில்லையெனில், ஒன்றை அடையாளம் கண்டு, அதற்காக உங்கள் முழு வாழ்க்கையையும் அர்ப்பணிக்க வேண்டிய நேரம் இதுவே.



**பவுலின் மனமாற்றம் நிகழ்ந்தக் காலத்தில் தமஸ்கு:**

பவுலின் மனமாற்றம் கி.பி. 33-36 ஆண்டுகளுக்கு இடையே நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த நேரத்தில் சிரியா என்ற ரோமருடைய மாகாணத்தில் ஒரு முக்கிய நகரமாக தமஸ்கு இருந்தது. எனினும், அது நபேத்திய மன்னர் நான்காம் அரேத்தா என்ற பிலோபாட்ரிஸின் அரசியல் செல்வாக்கின் கீழ் இருந்தது. நபேத்தியர்கள் பெட்ராவைத் தலைநகராகக் கொண்ட ஒரு சக்திவாய்ந்த அரபு இராஜ்யமாகும். புதிய ஏற்பாடு இதை 2 கொரி. 11:32-33இல் குறிப்பிடுகிறது. அங்கு பவுல், "அரேத்தா ராஜாவுக்குக் கீழ்ப்பட்ட சேனைத்தலைவன்" அவரைப் பிடிக்க நகர வாயில்களைக் காத்துக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

தமஸ்குவில் ஒரு பெரிய, நன்கு நிறுவப்பட்ட மற்றும் செல்வாக்குமிக்க யூத சமுதாயம் இருந்தது. வரலாற்றாசிரியர் ஜோசேபஸ் குறிப்பிடுகிறபடி, பெரிய யூதப் போரின் (கி.பி. 66-70) போது, தமஸ்குவில் 10,000 - 18,000 யூதர்கள் ஒரே நேரத்தில் கொல்லப்பட்டனர். சிதறடிக்கப்பட்ட யூதர்கள் குடியேறிய பிற நகரங்களைப் போலவே, யூதர்களில் ஒரே கடவுள் மற்றும் நன்னெறிகளால் ஈர்க்கப்பட்ட பல புறஜாதியர்கள் தமஸ்குவிலும் இருந்தனர். அவர்கள் "தேவனுக்குப் பயப்படுபவர்கள்" என்று அழைக்கப்பட்டனர். எனவே, பவுலின் தமஸ்கு பயணத்திற்கு முன்பே, அங்கு இயேசுவைப் பின்பற்றும் சமூகம் இருந்தது (அப். 9:1, 2). இப்பட்டணமே "புறஜாதியருக்கான அப்போஸ்தலர்" ஆன பவுல் என்ற தனது ஊழியக்காரனைப் பயிற்றுவிக்க தேவனால் நியமிக்கப்பட்ட இடமும் சமூகமுமாக இருந்தது.

**கடவுளின் தனித்துவமான பயிற்சி:**

யூதர்கள் அதிகம் வாழ்ந்த தமஸ்குவில் பல யூத ஜெப ஆலயங்கள் இருந்தன. இயேசுவைப் பிரசங்கிக்கும் அழைப்பைப் பெற்ற பவுல், பல நாட்கள் தமஸ்குவில் சீஷர்களுடன் இருந்தார். இது இயேசு மனிதனாக வந்த தேவன் (தேவனுடைய குமாரன்) என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள அவருக்கு உதவியது. எனவே, அவர் உடனடியாக யூத ஜெப ஆலயங்களுக்குச் சென்று இயேசுவே தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தார். முதலில் அவரைக் கேட்ட யூதர்கள், அவரது மனமாற்றத்தைக் கண்டு வியந்து, அவரை எதிர்க்கவில்லை. ஆனால், அவர் அதிக நம்பிக்கை அடைந்தபோது, வேதத்திலிருந்து இயேசுவே கிறிஸ்து என்பதை நிரூபிப்பதன் மூலம், தமஸ்குவில் வாழ்ந்த சந்தேகம் கொண்ட யூதர்களைக் கலங்கச் செய்தார் (அப். 9:19-22). இது அவரது முயற்சிகளை அவர்கள் எதிர்க்கச் செய்தது. எதிர்ப்பு அதிகரித்தபோது, கர்த்தர் அவரை நேரடியாக தம்மிடமிருந்து கற்றுக்கொள்ள அருகிலுள்ள அரேபியாவுக்கு அழைத்துச் சென்றார் (கலா. 1:17).

**நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?**

நாம் நீதியானதைச் செய்ய வைராக்கியம் கொண்டிருக்கும்போது கிருபையாக தேவன் சரியான நேரத்தில் நம் வாழ்வில் குறுக்கிடுகிறார். அவர் நமது ஆவல்களையும், கொள்கைகளையும் மாற்றுகிறார். அவர் தன்னை நமக்கு வெளிப்படுத்தி, தன் பாரத்தை நம் இதயங்களில் வைக்கிறார். அவர் நமக்காக நிர்ணயித்த இலக்குகளை அடையுமாறு நம்மைப் பயிற்றுவிக்கிறார். அப்போஸ்தலர் பவுலைப் போல நாம் நம்மையே அர்ப்பணிக்கும் போது, நம்மைக் கடினமான ஊழியப் பகுதிகளில் உபயோகிக்கும் முன்பு, நம்மைப் பாதுகாத்து, உருவாக்குவார். வியக்கத்தக்க விதமாக, நமது கர்த்தராகிய இயேசு தனது ஒவ்வொரு ஊழியருக்கும் இதைச் செய்கிறார். இந்த செயல்முறையை நீங்கள் ஏற்கனவே உங்கள் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறீர்களா? அவருக்கு விசுவாசமாக ஊழியம் செய்வதன் மூலம், அவரோடு உருவாகும் இந்த நித்திய ஐக்கியத்தை அனுபவிக்க உங்களைக் கர்த்தர் இன்று அழைக்கிறார்.



# வாலிபர் ஜெபக்குழுவின் ஆரம்பமும் வளர்ச்சியும்...

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, திருமுல்லைவாயில் பிராந்தியம் வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவின் சார்பாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

2013ஆம் ஆண்டு எங்கள் பகுதியின் வாலிபர் ஐக்கிய கூடுகை திருமுல்லைவாயில் மற்றும் அண்ணனூர் ஆகிய இரண்டு பகுதிகளில் நடைபெற்றது. இக்கூடுகையில் திருமுல்லைவாயில் பகுதியில் 25 வாலிபர்களும், அண்ணனூர் பகுதியில் 30 வாலிபர்களும் கலந்துகொண்டனர்.

பின்னர் 2022ஆம் ஆண்டு துவக்கம் முதல் திருமுல்லைவாயில் பிராந்தியத்தின் ஒருங்கிணைந்த வாலிபர் ஐக்கிய கூடுகையாக இன்று ஒரே இடத்தில் நடைபெற்று வருகிறது. தற்போது வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்கள் என 40 பேர் ஒரே இடத்தில் கூடி ஜெபிக்கிறோம். இக்கூடுகையை வாலிபர்களே நடத்துவார்கள். இதன் மூலம் இவர்கள் பல இடங்களில் ஆண்டவரின் ஊழியத்தைச் செய்கிறார்கள்.

கடந்த ஆண்டு பூண்டி மற்றும் மாநில முகாமில் நடந்த வாலிபர் கூடுகையில் கலந்துக் கொண்ட வாலிபர்களில் சிலர் மிஷனெரி தரிசனம் பெற்று ஊழியத்திற்கென்று தங்களை ஒப்புகொடுத்திருக்கிறார்கள். மேலும் இவர்கள் தலைமைத்துவ பொறுப்பேற்று ஜெபக்கூடுகையையும் நடத்திவருகிறார்கள்.

தேவனுக்கே மகிமையுண்டாவதாக.



# Gen-Zக்கு ஓர் அறைகூவல்

இந்தியாவில் ஆண்டுதோறும் ஜனவரி 12ஆம் தேதி தேசிய வாலிபர் தினமாக கொண்டாடப்படுகிறது. இது சுவாமி விவேகானந்தாவின் பிறந்தநாளை முன்னிட்டு அனுசரிக்கப்படுகிறது. இந்நாளை தொடர்ந்து ஒரு வாரம் தேசிய வாலிபர் வாரமாக கொண்டாடப்படுகிறது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இளைஞர்களால் உதயமான ஓர் மிஷனெரி இயக்கம். எனவே இயக்கமாக இந்திய இளைஞர்களுக்காக மன்றாடுவது நமது தார்மீக பொறுப்பாகும்.

இந்திய இளைஞர்களுக்காக மன்றாடுவதோடு நமது பொறுப்பு முழுமையடைவதில்லை. நமது குடும்பங்களிலிருந்து அடுத்த தலைமுறையினரை மிஷனெரிப் பணியில் தரிசனம் கொண்ட தலைவர்களாக ஊக்குவித்து வளர்ப்பது இயக்கமாக நமது இன்றைய முதல் பொறுப்பாகும். முழு நேர மிஷனெரிகளாக, ஜெபக்குழு மற்றும் ஸ்கேன் தலைவர்களாக பல நிலைகளில் நமது பிள்ளைகளை நெறிப்படுத்துதல் அவசியமான பணியாகும். 2024ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு ஆய்வில் (EFI ஆமோதித்தபடி) கிறிஸ்தவ இளைஞர்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற தீர்மானிப்பதில் அவர்கள் பெற்றோர்களே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள் என தெரியவந்துள்ளது. கிறிஸ்தவ வாலிப முகாம்கள், கிறிஸ்தவ தலைவர்கள், நண்பர்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றின் தாக்கத்துடன் ஒப்பிடும்போது பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது என்பதை தெளிவுப்படுத்துகிறது.

இக்கால இந்திய இளைஞர்களைக் கிறிஸ்துவின் உண்மை சீஷர்களாக வழிநடத்த முதற்படியாக அவர்கள் சந்திக்கும் முக்கிய சவால்களை நாம் புரிந்துகொண்டு அவைகளுக்காக ஜெபிப்போம். இந்திய தேசமானது உலகில் அதிக இளைஞர்களின் தொகையைக்கொண்ட நாடாகும். மக்கள் தொகையில் 65% பேர் 35 வயதிற்கும் குறைவானவர்கள். இளைஞர்களே நாட்டின் வளர்ச்சியை நடத்துகிற முக்கிய சக்தியாவர். ஆனால் வேலை வாய்ப்பின்மை, வேலை இழப்பு, மதுபானம், போதைப்பழக்கம், சமூக ஊடகப் பழக்கம், மன அழுத்தம், தற்கொலை எண்ணம் போன்ற கடுமையான சவால்கள் அவர்களது உன்னதமான தரிசனங்களைக் கானல் நீர் போன்ற கனவுகளாக சிதைத்துவிடுகிறது.

நகர்ப்புற இளைஞர்களின் வாழ்க்கை இதுவரை இல்லாத அளவிற்கு சிக்கலாகியுள்ளது. தொழில்நுட்ப மாற்றம், வாழ்வியலின் மாற்றம், வேகமான வளர்ச்சி ஆகியவை மன அழுத்தத்தையும், தாழ்வையும் ஏற்படுத்துகின்றன. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் 87% இளைஞர்கள், குறிப்பாக இளம் பெண்கள் கல்வி, மருத்துவ பயிற்சி, வேலைவாய்ப்புகள், பொருளாதார, சமூக மற்றும் அரசியல் போன்றவற்றில் சமத்துவமின்மையால் பாதிக்கப்படுகிறார்கள் (UNDP Youth Strategy, 2014-17).

கிராமபுற இளைஞர்களின் நிலையைக் காணும்போது இந்தியாவின் மொத்த இளைஞர்களில் 68% பேர் கிராமபுற இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர்களில் பலர் நகரங்களுக்கு கூலித் தொழிலாளர்களாக குடிபெயர்வதால் கிராம வளர்ச்சி மந்தமாகிறது. அதேநேரத்தில் நகரங்களில் அவர்கள் தற்காலிக வேலைகளில் குறைந்த ஊதியத்திற்கு சிக்கப்படுகிறார்கள்.

*வேலை வாய்ப்பின்மை:* 15-34 வயதிற்குட்பட்ட இளைஞர்களில் 36% பேர் வேலை வாய்ப்பின்மையால் அவதிப்படுகின்றனர். இதுவே நாட்டின் மிகப்பெரிய பிரச்சனை என ஆய்வு (Lokniti-CSDS Survey, 2023) கூறுகிறது. 36% மும்பை ஐ.ஐ.டி.யின் பட்டதாரிகளுக்கு சரியான வேலை அமையவில்லை என்ற பத்திரிகை செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

*போதை & மது:* 1.58 கோடி இளம் வாலிபர்களின் வாழ்க்கையில் போதை மற்றும் மதுப்பழக்கம் பெரும் சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளன.

*மனநலம்:* 18-24 வயதுள்ள வாலிபர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு ஆரோக்கியமான மனநிலை இல்லை. 41% தற்கொலைகள் 30 வயதிற்குட்பட்டவர்களிடமே நிகழ்கின்றன.

*சமூக ஊடகம்:* ஃபேஸ் புக், யூ டியூப், ரீல்ஸ் போன்ற சமூக வளைத்தளங்களில் அதிக நேரத்தை விரயமாக்குவதால் இளைஞர்களின் புதிய கற்பனைத்திறன் குறைந்து, கோபம், தளர்ச்சி ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன.

*உடல் பருமன்:* நகரங்களில் சரியான உணவுப் பழக்கமின்மையால் உடல் பருமன் அதிகரித்துள்ளது.

இவை அனைத்தும் நமது இளைஞர்களுக்காக தீவிர ஜெபமும், செயலும் தேவை என்ற அறைகூவலை நமக்கு விடுக்கிறது.

*ஜெபம்:*

கர்த்தாவே, எமது இந்திய இளைஞர்களை உம்மிடம் அர்ப்பணிக்கிறோம். அவர்கள் உம்மால் படைக்கப்பட்ட உம்முடைய பிள்ளைகள். இவர்களை அடிமைத்தனம், வேலை இழப்பு, மன தளர்ச்சி, உடல் சோர்வு ஆகியவற்றிலிருந்து விடுவித்து நம்பிக்கை, ஞானம் மற்றும் உம் வல்லமையால் நிரப்பும். கல்வி, வேலை, குடும்பம், சமூகம் என எல்லா துறைகளிலும் உம்மை மகிமைப்படுத்தும் தலைமுறையாக இவர்களை எழுப்பும். இந்திய இளைஞர்கள் கிறிஸ்துவின் அன்பை உலகமெங்கும் வெளிப்படுத்தும் ஒளியாக வளர வேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஆமென்!


அருள்திரு. காட்வின் கிருபாகரன், மிஷனெரி-ஜார்கண்ட்

திரு. ஆசீர் டேனியல், வாலிபர் பிரிவு-ரெட்ஹில்ஸ்

# விவாகக் களம்

## HANDLE WITH CARE

### RIGHT FOUNDATION




MRS. VASANTHI EMMANUEL

திருமண வயதை அடைந்த அந்த இளைஞனுக்குள் ஓர் அடக்கயியலாத ஆவல்...

திருமணம் அது எப்படி இருக்கும்? என அறியும் ஆவலோடு அனுபவப்பட்ட பெரியவர்களிடம் கேட்க ஆரம்பித்தான்... ஒருவர் சொன்னார், ஐயோ! அதுவா... அது நரகம்ப்பா (A Hell)... ஏன் தான் கல்யாணம் செய்தேனோ... என தினமும் நொந்து கொண்டிருக்கிறேன்ப்பா... மற்றொருவர்: துக்கம் தொண்டையை அடைக்குதுப்பா... நான் என்ன பாவம் செய்தேனோ? என் முன்னோர்கள் என்ன பாவம் செய்தார்களோ? எல்லாவற்றையும் சேர்த்து தொலைக்கதான் எனக்கு இந்த நிலைமையோ என வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் A Purgatory place பா...

இது கொஞ்சம் பரவாயில்லையே... முதல் ஆள் ரொம்பவும் பயங்காட்டிட்டான்... இன்னும் ஒருத்தர் கிட்ட கேட்டுப் பார்ப்போம்!!!

மூன்றாமவர்: தம்பி அது ஓர் பரதீஸ் (A Paradise) பரலோகத்தில் அனுபவிக்கப் போகும் மகிழ்ச்சிக்கு முன் இப்பூமியில் என் குடும்ப வாழ்வில் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

It's not a Burden, but it's a Blessing...

- ✦ பிசாசின் நயவஞ்சகத்திற்கு இணங்கி, அவனுடைய தப்பு தாளங்களுக்கு, தாளம் போடுபவர்களுக்கு அது நரகம் தான்.
- ✦ சுயஇச்சை, மாம்சீக எண்ணம் மற்றும் குறுகிய வட்டங்களுக்குள் தங்களைப் பொருத்திக் கொள்பவர்களுக்கு அது ஓர் உத்தரிக்கும் இடமாக, பாடுகளில் சதா உழன்று கொண்டிருக்கும் நிலையாகலாம்.
- ✦ தேவனுடைய விருப்பத்தை மையமாக்கி, அவருடைய சித்தத்திற்கு முதலிடம் கொடுப்பவர்களுக்கு மெய்யாகவே அது ஒரு மோட்சம். ஆம், அது ஒரு பரலோக அனுபவம்.

இவ்விதம் கொண்டாட வேண்டிய இந்த தூய பந்தத்தை, புனிதத்தை மறைத்து, மாம்சீக உணர்ச்சியை முக்கியப்படுத்தி சினிமா நிழல் உலகம் வேறொரு பாடத்தை நம் சந்ததியினருக்கு காட்டிவிட்டது...

கொண்டாட வேண்டியது இந்த மணவாழ்வு என நம் பரிசுத்த வேதாகமமும், மற்ற மார்க்க நூல்களும் சொன்னாலும், இது நாம் நினைப்பது போன்று அவ்வளவு எளிதானதல்ல.

வேண்டாத தர்க்கங்கள், சந்தேகங்கள், மூர்க்கமான செயல்பாடுகள் எழும்பி குடும்பத்தை சீர்குலைக்கும் நிலை வரும் பொழுதெல்லாம் நாம் முடிவு கட்டக்கூடாது, இவள்/இவன் தான் என் முதல் எதிரி என்று. எதிரி உங்கள் துணைவர் இல்லை, சத்துரு. ஏன்... மனிதனை உண்டாக்கிய கர்த்தர் அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல எனக் கண்டதை, சத்துரு தனிமையாய், மணமுறிவோடு வாழ்வதுதான் நல்லது எனக் காண்பிக்க முயற்சிக்கிறான். திருமணம் தான் மனிதன் பாவம் செய்வதற்கு முன்பாக தேவன் உருவாக்கிய முதல் நிறுவனம் (The first institution created by God). எனவேதான் இதன் நேர்த்தியையும், உன்னதத் திட்டத்தையும் குறைத்து மதிப்பீடு செய்து, தனது தந்திர திட்டங்களின் மூலம் அழிக்க வகைத் தேடுகிறான். அதற்கு அவன் கையில் எடுத்துள்ள நயவஞ்சகத் திட்டம் கர்த்தர் உருவாக்கிய கணவன் தான் குடும்பத்தின் தலைவன் என்ற அடிப்படையை திசை திருப்பி பெண்ணியம் (Feminism), பெண்கள் உரிமை (Women Rights), ஓரினபாலாரை மணந்து கொள்வது (Lesbianism), ஒற்றை பெற்றோர் (Single Parenting), மணமாகாமலேயே இணைந்து வாழ்வது (Live in relationship) இப்பொழுது எல்லாவற்றையும் விட, சமையலறையில்லா வீடுகள் என்ற புதிய சூழ்ச்சிகள் மூலம் குடும்பம் என்ற உன்னத அமைப்பு, சாதகமாக இருப்பதைப் போல் ஒரு மாயத்தை உருவாக்கிச் சிதைக்கிறான்...

இதிலிருந்து இன்னும் தெளிவான விளக்கங்களோடு நம் வாழ்வை அமைத்திட வரும் இதழ்களில் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

# ராஜ்ய புத்திரரின் அசதியில் சாத்தானின் வீரிய செயல்பாடு

அன்புக்குரியவர்களே! இறைமைந்தனாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிந்தனையில் இயேசு சொன்ன கோதுமை மற்றும் களைகள் குறித்த உவமையைப் பற்றி சிந்திக்க உள்ளோம். முதலாவதாக கோதுமை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஏன் கோதுமை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற கேள்வி எழலாம். பண்டைய காலத்தில் கோதுமை மக்களின் அன்றாட உணவில் முக்கியப் பங்கை வகித்தது. கோதுமை மாவிலிருந்து செய்யப்பட்ட ரொட்டி பெரும்பாலான மக்களின் உணவாக இருந்தது என்பதை வேதாகமத்தின் பல இடங்களில் காண முடிகிறது. இதுவே யூத மக்களின் வாழ்க்கையிலும் கலாச்சார அடையாளத்திலும் முக்கிய பங்கைக் கொண்டிருந்தது.

### இயேசுவின் கோதுமை மற்றும் களை உவமை நோக்கம்:

இயேசுவானவர் தமது ஊழியக் காலத்தில் கோதுமை, விதை, விளைச்சல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல உவமைகளைக் கூறியிருக்கிறார். அவர் மக்களுக்கு பரலோக அரசை எளிதாகப் புரிந்து கொள்ளுமாறு அன்றைய விவசாய வாழ்க்கைச் சூழலை விளக்கினார். அதில் ஒன்றாக "கோதுமையும், களையும்" பற்றிய உவமை (மத்தேயு 13:24-30) குறிப்பிடத்தக்கது.

இந்த உவமையில், தேவ ராஜ்யத்தை ஒரு வயலின் கதையாக இயேசு சொல்லுகிறார். ஒரு நல்ல மனிதன் தன் வயலில் நல்ல விதை விதைக்கிறான்; ஆனால் இரவில் எதிரி வந்து களை விதைக்கிறான். இரண்டுமே ஒன்றாக வளர்கின்றன. அறுவடை நேரத்தில் தான், கோதுமை களையிலிருந்து பிரிக்கப்படுகின்றது. இதன் மூலம், பரலோக ராஜ்யத்திற்கு அயத்தமானவர்களும், அயத்தமில்லாதவர்களும் இறுதி நாளில் பிரிக்கப்படுவார்கள் என்ற ஆழமான பொருள் ஆதாரமாக கொடுக்கப்படுகிறது.

முற்காலங்களில் ஒரு நாட்டை பொருளாதாரரீதியாக வீழ்த்த எதிரி நாடுகள் களை விதைகளை அவர்களின் விளைநிலங்களில் விதைப்பது வழக்கம். இதேபோல், ஆன்மீக உலகிலும் எதிரி மனிதர்களின் மனதில் "தீய விதைகளை" விதைப்பதை இயேசு குறிப்பிடுகிறார். ஒரு நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கும்போது அது அண்டை நாடுகளின் உதவியை நாடுவது போல, கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் தங்களது வாழ்வில் எதிரியின் சூழ்ச்சியில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள தேவனின் அருளை நாடவேண்டும்.

### இன்றைய காலத்தின் சிந்தனை:

இயேசுவின் காலத்தில் வேதபாரகரும், பரிசேயர்களும் தங்களுக்கு ஏற்பப் போதனையை மாற்றி மக்களுக்கு கலப்புப் போதனை செய்தனர். ஆனால் அந்த போதனை தேவ ராஜ்யத்திற்கு ஏற்ற "கோதுமை" போதனையாக இல்லாமல் "களை" நிறைந்த போதனையாக மாறியது. இதை மக்களுக்கு தெளிவாக விளக்க இயேசுவானவர் உவமையைக் கொண்டு போதித்தார். இன்றைய திருச்சபையில் விசுவாசிகளும் இக்கருத்தை ஆழமாகக் கவனிக்க வேண்டும். பல சமயங்களில் தங்கள் சொந்த கருத்துகளை வேதாகமத்தின் பெயரில் போதித்து மக்கள் மனங்களில் "களை" விதைக்கிறார்கள். ஆகவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாகிய நாம் எந்நேரமும் அவருடைய சத்தியத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளவும், சரியான போதனையை உணரும் பிள்ளைகளாகவும் இருக்க தேவன் அழைக்கிறார். நவீன உலகில், ஒரு பொருளில் குறைந்த அளவு பழுது காணப்பட்டாலே அது ஏற்றுக்கொள்ளப்படாது. அதுபோலவே, கர்த்தர் நம்மை பரலோக களஞ்சியத்தில் சேர்க்கும்போது, நம்மிடத்தில் காணப்படும் அனைத்து தீய குணங்களையும் அகற்றி, விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கிறார். இதுவே இவ்வேதப்பகுதியின் மையச் செய்தியாகும்.

### கிறிஸ்தவர்களின் அழைப்பு:

இந்த உவமையில் இரண்டு முக்கிய அழைப்புகள் காணப்படுகின்றன.

1. **ஆவிக்குரிய காவலராக இருத்தல்:** நாம் கிறிஸ்துவின் பணியாளர்களாக, விதையை நட்டு விட்டோம் என்று சும்மா இருக்காமல் அதைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். நமது சிந்தனையும், போதனையும் சுத்தமாக இருப்பதற்கு விழிப்புடன் இருக்க அழைக்கப்படுகிறோம்.
2. **தீய குணங்களை அகற்றுதல்:** நம் உள்ளத்திலிருக்கும் களைப் போன்ற பொறாமை, பகை, தீய எண்ணங்கள் போன்றவற்றை நிரந்தரமாக அகற்ற வேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் பரலோக களஞ்சியத்தில் சேர்க்கப்படக்கூடிய உயர்தரமான "கோதுமை மணிகளாக" ஆவோம்.

ஆகவே ஆண்டவரின் இராஜ்ய களத்திற்கு என்று முழுமையாக நம்மை அர்ப்பணித்து, அவருடைய திட்டத்தின்படி அவர் நம் வாழ்விலே செய்வதற்கு நம்மை அவர் கரங்களிலே படைப்போம். அவர் நம் வாழ்வில் எல்லாவற்றையும் நேர்த்தியும், செம்மையுமாக செய்து நம்மை நேர் பாதையில் வழி நடத்துவாராக.

REV. K. KINGSLEY JOHN

# வார்த்தைக் களம்

# கனம்

*நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் ‘கனம்’ பெற்றாய்...*

*(ஏசாயா 43:4)*

REV. ALBERT PRABHAKARAN

கருவாகும் முன்னே ‘கனம்’ பெற்றேன் – உலகில்
உருவாகும் முன்னே உயர்வு பெற்றேன்.
சொந்தம் என நெஞ்சம் தழுவினீர்!
பந்தம் என பரிந்து பேசினீர்!!

நின் பார்வைக்கு அருமையானேன்!
நேசரே! நின் அன்புக்கு அடிமையானேன்.
நிறைவே! நீர் தங்கும் ஒப்பற்ற குடிலானேன் – உலகுக்கு
உம்போல் உன்னத ஒளியானேன்.

காரிருள் கடுவெளியிலும்
ஆழிப்பெருங்கடல் சீற்றத்திலும்
அஞ்சிடேன், மனம் துஞ்சிடேன்
மரணமும்... மாபெரும் கொலைக்களமும்,
எரியும் தீயும், எதிரியின் தீதும்
என்னவர் இருக்கையில் எதுவும் செய்திடாது,
எண்ணப்பட்ட என் தலை முடிகள்
எதிரியின் சொல்லுக்கு என்றும் உதிர்ந்திடாது.



உள்ளம் உடைந்தேன் – “உன்னதரே”
உம் அருகில் நெருங்க மனம் மருண்டேன்.
பாவியானேன்... பரிசுத்தம் இழந்தேன்...
கண்ணிழந்தேன்... காசாவின் சிறையிலே
மகிமையிழந்து மாவரைத்தேன்...
பலர் எள்ளி நகையாட இருதூணுக்கிடையே
வீணர்களுக்கு வேடிக்கைப் பொருளானேன்...

முக்காலம் நிறைந்தவனே!! முக்தி நாயகா!!
அழியா உம் அன்பால் அசுத்தன் எனை அள்ளி எடுத்தீர்.
பரமனே! உம் பாதம் சரணடைய
பாவி எனக்கு மீண்டும் ஓர் பாக்கியம் கொடுத்தீர்!!
“சண்டமாருதம்” எனை சல்லிகளாக்கியது,
“சத்திய வேதம்” அழிந்த என் வாழ்வை அழகாக்கியது.

பெலம் அல்ல – என் பெரும் முயற்சி அல்ல
“பெருமானே” அஃது நின் நீங்கா நித்திய காருண்யம்!!
எகிப்தின் இருள் விலக்கி, செங்கடல் அலை ஒதுக்கி, எரிகோவின் மதில் நொறுக்கி,
ஒலிவமலையின் உயரே வைத்து உலகுக்கு ஒளியாக்கினீர்...
என் பார்வைக்கு அருமையானாய் என...
தேவ கணங்களுக்கும் மேலாய் கனமாக்கினீர்...

தேவே! விண்மகன் வேந்தே! நின் கருணை ஒன்றே போதும்...
நித்தம் நின் விரல் பிடித்து நடக்கும் கிருபை ஒன்றே போதும்!!



# குருதி களம்

## இரத்தசாட்சியாக மரித்த அப்போஸ்தலர்

## பேதுரு

REV. PRABAKARA SARATHY

**பேதுரு (கலிலேயாவைச் சேர்ந்த பேதுரு - ஓர் அறிமுகம்:**

பேதுரு, முதலில் "சீமோன்" என்று அழைக்கப்பட்டவர். இயேசுவின் முதல் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவரும், அப்போஸ்தலரும், தொடக்கக் கிறிஸ்தவ சபையின் தலைவருமாவார். பேதுருவும், அவரது சகோதரர் அந்திரேயாவும் கலிலேயா கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள். பேதுருக் கர்த்தரை பின்தொடர்பவராக ஆனார். அவருக்கு இயேசு "கேபா" (அராமிக் - 'பாறை') என்று பெயரிட்டார். அதன் கிரேக்க வடிவமே 'பேதுரு'. பேதுரு திறமையானவர், தன்னம்பிக்கையுள்ளவர், சில சமயங்களில் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் முன்கூட்டியே செயல்படுபவர் என்று நற்செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

**பேதுரு - சீஷன்:**

புதிய ஏற்பாடு இயேசுவைப் பின்தொடர்பவர்களை "சீஷர்கள்" என்று குறிப்பிடுகிறது. "சீஷன்" என்ற ஆங்கிலச் சொல் "discipline" என்ற சொல்லிலிருந்து வந்தது. அதாவது ஒருவரை முழுமையாக பின்பற்றுபவர். மேலும் அவர் பன்னிரண்டு சீஷர்களில் முக்கியமான ஒருவராகவும், தொடக்க சபையில் தலைமை வகித்தவராகவும் காணப்படுகிறார். கலா. 2:9 போன்ற பகுதிகளில் பேதுரு ஒரு "தூண்" என அழைக்கப்படுகிறார். இயேசுவின் உயிர்த்தெழுதலை முதலில் கண்ட சீஷர்களில் ஒருவன் எனவும் குறிப்பிடப்படுகிறார் (1 கொரி. 15:5).

யவீருவின் மகளை உயிர்ப்பித்த சம்பவம் (மாற்கு 5), இயேசுவின் மறுரூபம் (மாற்கு 9; மத். 17), கெத்சேமனே தோட்டத்தில் இறுதி இரவு (மாற்கு 14) போன்ற முக்கிய நிகழ்வுகளில் பேதுரு இயேசுவுடன் இருந்தார். இயேசு பேதுருவின் மறுதலிப்பை முன்கூட்டியே அறிவித்தாலும், அவனது மனதிரும்புதலையும் முன்னமே கூறினார். இயேசு உயிர்த்தெழுந்ததைத் தூதன் பேதுருவினிடம் தெரிவிக்கச் சொல்கிறார் (மாற்கு 16:7).

**பேதுரு - அப்போஸ்தலர்**

மாற்கு நற்செய்தியில் பேதுருவின் சம்பவங்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு வல்லமையாக நற்செய்தியை அறிவித்தபோது, ஆயிரக்கணக்கானோர் விசுவாசத்திற்குள் வந்தனர் (அப். 2, 3). அவர் அதிசயங்களுடன் சபை வழிநடத்தலில் பங்கேற்றார் (அப். 5). பின்னர் சமாரியாவில் நற்செய்தியைப் பரப்பினார் (அப். 8). மேலும் கொர்நேலியுவிற்கு நற்செய்தி கூறும் கருவியாகவும் அவர் முக்கிய பங்காற்றினார் (அப். 10). தனது கடைசி காலத்தில் பேதுரு இரு கடிதங்களை எழுதி, இயேசுவின் போதனைகளை உறுதிப்படுத்தினார்.

**புதிய ஏற்பாட்டில் பேதுரு:**

நான்கு நற்செய்திகள், பவுலின் கடிதங்கள் மற்றும் பேதுருவின் பெயரில் உள்ள இரு கடிதங்களிலும் அவர் குறிப்பிடப்படுகிறார். யோவான் 21:15இல் "யோனாவின் குமாரனாகிய சீமோனே" என்று அழைக்கப்படுகிறார். அவர் திருமணமானவர் என்பதற்கான மறைமுக ஆதாரம் மத். 8:14, 1 கொரி. 9:5 ஆகியவற்றில் உள்ளது. இவர் கிரேக்கம் அறிந்தாரா என்பதும் சந்தேகமே. அவரைச் சீஷனாக அழைத்தது, இயேசுவின் கலிலேயா ஊழியம் தொடக்கத்திலேயே நடந்தது என நற்செய்திகள் உறுதிப்படுத்துகின்றன (லூக்கா 5:1-11).

**பேதுருவிடமிருந்து நாம் கற்கும் பாடங்கள்:**

மத். 16:13-18இல் பேதுரு, இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிவித்தான். மேலும் சிலுவையில் மரிக்கப்போகிறார் என்பதை அவன் ஏற்றுக்கொள்ள மறுத்தான். சில வசனங்களுக்குள் பேதுரு பெற்றிருந்த தயவின் நிலை எவ்வளவு பெரிய மாற்றத்தை கண்டது என்பது இங்கு தெளிவாகத் தெரிகிறது

- பேதுரு இயேசு யார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, தைரியமாக அறிவிக்கிறான் - அதற்காக இயேசு அவனைப் பாராட்டுகிறார்.
- சிறிது நேரத்திற்குப் பிறகு, பேதுரு ஒரு பெரிய தவறைச் செய்கிறான் - அதனை இயேசு திருத்துகிறார்.

இயேசுவை கைது செய்யும்போது மூன்றுமுறை மறுதலித்த பேதுரு (லூக் 22:54-62), மன வேதனையால் அழுதான். ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலின் செய்தியை கேட்டவுடன், கல்லறைக்குச் செல்ல ஓடியவர்களில் ஒருவனாகவும் இருந்தான் (யோவான் 20:1-10). பின்னர் இயேசு சீஷர்களுக்குத் தோன்றியபோது, அவருடன் உள்ள தொடர்பை (ஐக்கியத்தை) இயேசு மீண்டும் பேதுருவுக்கு வழங்கினார் (யோவான் 21:1-20). ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும், பேதுரு இயேசுவினிடமிருந்து விலகி ஓடாமல், அவரிடமே ஓடும் பழக்கத்தைக் கொண்டிருந்தான்.

**பேதுரு - அப்போஸ்தலனின் மரணம்:**

அப்போஸ்தலனாகிய பேதுரு கி.பி. 64-68 நீரோவின் ஆட்சி காலத்தில் துன்புறுத்தப்பட்டு ரோமாவில் இரத்தசாட்சியாக கொல்லப்பட்டார். கிறிஸ்துவைப் போலவே மரணமடைவதற்குத் தன்னைத் தகுதியற்றவன் என எண்ணியதால், பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டதாக ஆரம்ப கால கிறிஸ்தவ எழுத்தாளர்களும் மரபுகளும் விவரிக்கின்றன.

**உங்களின் பங்களிப்பு...**

Friends Missionary Prayer Band (FMPB) இயக்கத்தைச் சார்ந்த மிஷனெரிகள், சீஷனாகிய பேதுருவின் முன்நிழலாக விளங்குகின்றனர். இவர்கள் மிஷனெரிகளாக கர்த்தரின் ஊழியத்தை பணித்தளங்களில் செய்து அவரின் திருத்தூதுவர்களாகவும் திகழ்கின்றனர். நீங்களும் அவர்களுடன் சேர்ந்து ஊழியம் செய்ய விரும்புகிறீர்களா? FMPBஇன் மிஷனெரி வரலாற்றில் உங்கள் பங்களிப்பை எழுதுங்கள்!




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
திருவள்ளூர் மண்டலம்
அமைத்து நடத்தும்
வாலிபர் முகாம்
2026 ஜனவரி
காலை 15 (வியாழன்) 9.30 மணி
முதல்
மதியம் 17 (சனி) 1.00 மணி
வரை
இடம்: இறைவனின் தோட்டம்
சென்றாயன் பாளையம், பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம்.
செய்தியாளர்கள்:
Rev. விஜய் P. ஐசக், G.S., FMPB
Dr. ஜான் டேனியல், SAIACS – Bangalore
Rev. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங், FMPB
Rev. ரவிக்குமார், FMPB, Salem
Rev. P. டேவிட், FMPB,Kovai
சகோ. விக்னேஷ்வரன் [மிஷனெரி, குஜராத்]
LIVELY SONGS
ENGAGING SESSIONS
INSPIRING MESSAGES
வயது வரம்பு: 17 முதல் 30 வரை
பதிவு கட்டணம் : ரூ.150/-
வேதாகமம் மற்றும் படுக்கை கொண்டு வரவும்.
ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
கருப்பொருள்
எழும்பிப் பிரகாசி
ஏசாயா 60:1
அன்புடன் அழைக்கிறோம்!
தொடர்புக்கு
FMPB, PH: 98940 60046,
98419 36067, 9600114574


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தென்மண்டலம் நடத்தும்
கிதியோனியர் குடும்ப முகாம் - 2026
கருப்பொருள் :
இவர்களிலும் அதிகமாய்
யோவான் 21 : 15
...நாள்...
ஜனவரி 15 வியாழன் காலை 9.30 மணிமுதல்
ஜனவரி 17 சனி மதியம் 2.00 மணிவரை
...இடம்...
CSI ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி
நல்லூர், ஆலங்குளம்
ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும், மிஷனெரி தரிசனத்தில் வளரவும், சபையாக, ஜெபக்குழுவாக, குடும்பமாக அணி திரண்டு வாருங்கள்!
சிறப்பு நிகழ்வுகள் :
தரிசனமிக்க பாடல்கள்
அனலூட்டும் செய்திகள்
உணர்வூட்டும் சந்தியா வேளைகள்
ஜார்கண்ட் மாநிலத்தின் ஆத்தும பாரத்தை தரும் பணித்தள பகிர்வுகள் மற்றும் சந்தால் கலாச்சார நடனம்.
பதிவு கட்டணம்
ரூ.100
(5 வயதிற்கு மேற்பட்டவர்)
தலைமை :
The Rt.Rev.Dr. ARGST.பர்னபாஸ் B.A.,B.D.,D.D.,
பேராயர், CSI
திருநெல்வேலி திருமண்டலம்
முன்னிலை :
Rev. D.வில்சன் சாலமோன்ராஜ் B.Sc.,B.D.,
மேற்கு சபை மன்றத்தலைவர்
CSI, நல்லூர்
செய்தியாளர்கள் :
Rev. D.பால் சாலமோன் FMPB, சென்னை
Rev. P.பிரடெரிக் சத்திய சாமுவேல்
ஆயர், CSI, திருநெல்வேலி திருமண்டலம்
Bro. J.ரூபன் ராய் நெல்லை
Rev. S.டேனியல் தாமஸ்
செயலர், FMPB, தமிழ்நாடு & பாண்டி
மற்றும் வட இந்திய மிஷனெரிகள்
அனைவரும் குடும்பமாக பங்கு பெறுங்கள்..!
தொடர்புக்கு : தென் மண்டலம் C/o Rev. S.டேனியல் தாமஸ்
செயலர், FMPB தமிழ்நாடு & பாண்டி, Cell : 94888 05454
பிராந்திய அலுவலகங்கள் :
தென்காசி - 94218 89013
நெல்லை வடக்கு - 75980 18774
நெல்லை தெற்கு - 70943 93732
தூத்துக்குடி வடக்கு - 94436 94021
தூத்துக்குடி தெற்கு - 94443 93228
கன்னியாகுமரி - 62843 82348
ஆலங்குளம் - 94427 69813
94430 75053
94425 72765


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
வட சென்னை பிராந்தியம்
FOR 13-17 YEARS ONLY
TEENS CAMP 2026
THEME
YOUNG CONQUERORS
1 JOHN 2:13
REG FEES RS.200
SPEAKERS:
Bro.Y.Navaneethar
Bro. P. Sathish Kumar
& Missionaries
JANUARY
15TH 9 A.M-
17TH 2 P.M
OLIVE TREE GLOBAL SCHOOL
MANJAMBAKAM CHENNAI
Do bring your Bible, blanket, plate and toiletries
தொடர்புக்கு : 93423 43643 98400 21110 98415 98653 9622250220


HAPPY
NEW YEAR
2026


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, North Zone
சென்னை இளைஞர் பிரிவு
VISION 2030 வாலிபர் கூடுகை
2026 ஜனவரி
15 காலை 9 மணி முதல்
17 மாலை 1 மணி வரை
(வியாழன், வெள்ளி, சனி)
இடம்
Sacred Heart
Matric. Hr. Sec. School
தேவராஜ் நகர், சோழிங்கநல்லூர்,
சென்னை – 600119
Theme
Light for the Gentiles
Acts 13:47
செய்தியாளர்கள்
Rev. Vijay P. Isaac
Rev. S. Emmanuel Ranjit Singh
Rev. G. Kingsley
Bro. A. Sam Daniel
மற்றும்
மிஷனரிகளின் அனுபவ சாட்சிகள்
பணித்தள பகிர்வுகளும் உண்டு.
பதிவுக் கட்டணம் ₹200
18 முதல் 30 வயது இரட்சிப்பின் அனுபவம் உள்ள ஆண்/பெண் வாலிபர்கள் கலந்து கொள்ளலாம்.
வேதாகமம், பெட்ஷீட், தட்டு, டம்ளர் கொண்டு வரவும்
தொடர்புக்கு | 9841032224, 9444396215, 9622220220, 9445200041, 9629303912, 8292390481